
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 19.04.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 103 பக்கங்கள் : 16




மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## ஹோர்முஸ் நீரிணையில் பதற்றம்: கப்பல்களின் மீது துப்பாக்கிச் சூடு!

தெஹ்ரான், ஏப். 19

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் பயணித்த எரிபொருள் தாங்கிக் கப்பல் மற்றும் வணிகக் கப்பல்கள் மீது ஈரானிய புரட்சிகர காவற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக சர்தேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிரித்தானிய கடல்சார் வர்த்தகச் செயற்பாட்டுப் பிரிவின் தகவல்படி, ஓமானின் வடகிழக்கே 20 கடல் மைல் தொலைவில் பயணித்துக்கொண்டிருந்த எரிபொருள் தாங்கிக் கப்பலை ஈரானின் இரண்டு அதிவேகப் படகுகள் நெருங்கியுள்ளன.

எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி அந்தப் படகுகளிலிருந்து கப்பலை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக கப்பலின் மாலுமி தெரிவித்துள்ளார்.

எனினும், கப்பலும் அதிலிருந்த ஊழியர்களும் பாதுகாப்பாக உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தைத் தவிர, ஹோர்முஸ் நீரிணையை கடக்க முயன்ற மேலும் இரண்டு வணிகக் கப்பல்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈரானியப் படைகளின் இந்தத் தாக்குதலால் கப்பல்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடித் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

15

# மன்னாரில் வழங்கப்பட்டுள்ள மணல் அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தம்!

### முறைகேடுகள் குறித்த விசாரணை சி.ஐ.டி.க்கு!! வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயன் உத்தரவு

மன்னார், ஏப். 19

மன்னார் மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் வழங்கப்பட்ட மணல் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்களை உடனடியாகத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கும், அந்தப் பத்திரங்கள் வழங்கப்பட்டமை தொடர்பில் முன்வைக்கப்படும் மிகப்பெரிய முறைகேடுகள் குறித்துக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளுக்குப் பாரப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் மணல்



விநியோகத்தை ஒழுங்குபடுத்துவது தொடர்பான மாவட்ட மட்டத்திலான விசேட கூட்டம், மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் தலைமையில் நேற்று சனிக்கிழமை காலை மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

15


## எங்கள் விடுதலைப் போராட்ட வரலாறு அடுத்த தலைமுறைக்கான புனித மரபு!

### அன்னை பூபதி நினைவு நிகழ்வில் சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி, ஏப். 19

"எமது விடுதலைப் போராட்ட வரலாறு என்பது வெறும் பதிவுகள் அல்ல் அது எமது அடுத்த தலைமுறைக்கு நாம் கடத்த வேண்டிய புனிதமான மரபு. எமது வரலாற்று நாயகர்களின் தியாகத் தடங்களை இளைய தலைமுறையிடம் சேர்ப்பது எமது தார்மீகக் கடமையாகும் "என மலரும் புதுயுகம் அமையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற தியாகத்தாய் அன்னை பூபதியின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல்

15



## ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் முடக்கிய ஈரான்!

தெஹ்ரான், ஏப். 19

ஈரானிய துறைமுகங்கள் மீதான அமெரிக்க கடற்படையின் முற்றுகை தொடர்ந்தால் ஹோர்முஸ் நீரிணை மீண்டும் மூடப்படும் என ஈரான் அரசு எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் ஹோர்முஸ் நீரிணையின் கட்டுப்பாடு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியுள்ளதாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பொலிஸ்படை அறிவித்துள்ளது.

இது குறித்து ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பொலிஸ்படை அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

15

## பெரமுனவின் முன்னாள் எம்.பி. தாக்கப்பட்டார்!

கொழும்பு, ஏப். 19

பொதுஜன பெரமுன கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சம்பத் அத்துக்கோரள, பிட்டிகல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பம்பரவான பகுதியில் நேற்று முன் தினம்

15

## மலையக தமிழருக்கு இந்தியக் குடியுரிமை!

### இந்தியத் துணை ஜனாதிபதியிடம் வலியுறுத்துவார் மனோ கணேசன்

கொழும்பு, ஏப். 19

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளும் இந்தியத் துணை ஜனாதிபதி சி. பி. இராதாகிருஷ்ணனைச் சந்திக்கும்போது, மலையகத் தமிழர்களுக்கான விசேட கோரிக்கைகள் அடங்கிய முன்மொழிவு களை முன்வைக்கவுள்ளதாகத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களில் எவரேனும் விரும்பும் பட்சத்தில், அவர்களுக்கு இலகுவான முறையில் கடல் கடந்த இந்தியக் குடியுரிமை அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ் முற்போக்கு கூட்டணி வலியுறுத்தவுள்ளது.

இந்தியத் தூதரகத்தின் கீழ் இயங்கும் இலங்கை தோட்டத் தொழிலாளர் கல்வி அறக்கட்டளையின் நோக்கங்களை விரிவுபடுத்தி, மலையகக் கல்வி வளர்ச்சிக்கான அனைத்து உதவிகளையும் அதன் ஊடாக முன்னெடுக்கக் கோரப்படவுள்ளது. குறிப்பாகப் பின்வரும் திட்டங்கள் முன்மொழியப்படவுள்ளன:

மலையகத்தில் பல்கலைக்கழக வளாகம் ஒன்றை ஸ்தாபித்தல்.

15

## முல்லை. வைத்தியசாலை கணக்காளர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது!

முல்லைத்தீவு, ஏப். 19

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை (மாஞ்சோலை வைத்தியசாலையின்) கணக்காளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் கொழும்பிலிருந்து வருகை தந்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

"விநியோகஸ்தர் ஒருவரிடம் கையூட்டு பெறுவதற்கு முயற்சித்த போது குறித்த தகவல் கொழும்பு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழு

15

## வலுசக்தி அமைச்சராக அநுர கருணாதிலக்க?



கொழும்பு, ஏப். 19

குமார ஜயக்கொடியின் இராஜினாமாவால் வெற்றிடமாகியுள்ள உள்ள எரிசக்தி அமைச்சுக்கு, துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்கவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளதாக

15

## பாதுகாப்புப் பிரதி அமைச்சராக விரைவில் சம்பத் துய்யகொந்தா

கொழும்பு, ஏப். 19

ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருணா ஜயசேகர வகிக்கும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் பதவிக்கு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஓய்வு பெற்ற எயார்வைஸ் மார்ஷல் சம்பத் துய்ய கொந்தாவை நியமிக்க ஆராயப்படுவதாக

15



## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இன்று விசேட பிரார்த்தனை

கொழும்பு, ஏப். 14

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக, இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை இன்று ஞாயிற்றுக்கிழமையை பிரார்த்தனை தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது என கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

2019 இல் குண்டுத் தாக்குதல் நடந்த தினமான ஏப்ரல் 19 ஆம் திகதி நாட்டில் உள்ள அனைத்து கத்தோலிக்கத் தேவாலயங்களிலும் விசேட வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

15

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# 81 ரி- 56 ரக துப்பாக்கிகள் மற்றும் 107 கைத்துப்பாக்கிகள் பறிமுதல்!

## சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்ட 32 குற்றவாளிகள் இலங்கைக்கு

கொழும்பு, ஏப். 19

2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் 81 ரி-56 ரக துப்பாக்கிகள், 107 கைத்துப்பாக்கிகள் மற்றும் 76 ரிவோல்வர்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யு. வூட்லர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

2024 முதல் 2026 வரை சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்ட 32 குற்றவாளிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். மேலும் 15 பேர் சர்வதேச ஒத்துழைப்புடன் கொண்டுவரப்படவுள்ளனர். சர்வதேச காவலில் உள்ள 8 பேரை விரைவில் நாட்டுக்கு கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், மேலும் 94 சிவப்பு அறிவித்தல்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தேசிய சுற்றிவளைப்பு நடவடிக்கையின் கீழ் இதுவரை 30 இலட்சத்து 11,000 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 1,873 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, 2026 ஆம் ஆண்டில் மாத்திரம் 44, 587 பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 31,796 சாரதிகளுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் 30 முதல் இதுவரை 1,579 கிலோ 616 கிராம் ஹெரோயின், 1,975 கிலோ 970 கிராம் "ஐஸ்" போதைப்பொருள் மற்றும் 5,115 கிலோ 716 கிராம் கஞ்சா என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (எ)

## டித்வா புயல் தாக்கத்தின் போது

# உயிரிழந்த கால்நடைகளுக்கான நஷ்டஈடு வழங்குவதில் முறைகேடு

கிளிநொச்சி, ஏப்.19

டித்வா அனர்த்தம் காரணமாக இறந்த கால்நடைகளுக்கு நஷ்டஈடு வழங்கும் செயல்பாட்டில் முறைகேடுகள் இடம்பெற்றன என்று பூநகரி பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தங்களது பிரதேசத்தில் அனர்த்தம் காரணமாக இறந்த கால்நடைகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டது தொடக்கம் நஷ்டஈட்டு தொகை வழங்குதல் வரை முறையாக இடம்பெறவில்லை எனவும் இதில் முறைகேடுகள் இடம்பெற்றன எனவும் பூநகரி பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பொது மக்களின் பார்வைக்கு பூநகரி பிரதேச செயலக அலுவலகத்திலும், பூநகரி பிரதேச கால்நடை திணைக்கள அலுவலகத்திலும் மக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்ட பட்டியலில் உள்ள பெயர்களும், பின்னர் நஷ்டஈடு வழங்கப்பட்ட பெயர்களிலும் வேறுபாடுகள் காணப்படுவதாகவும் பொது மக்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.

அதிக கால்நடைகள் இறந்தவர்களுக்கு குறைந்த நஷ்டஈடும், கால்நடைகள் வளர்க்காதவர்கள், குறைவான கால்நடைகள் இறந்த பயனாளிகளுக்கு அதிக நஷ்டஈடும் வழங்கப்பட்டுள்ளது எனவும் பொது மக்கள் கூறினர்.

எனவே, இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட கால்நடைகள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் அலுவலத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, டித்வா புயலால் இறந்த கால்நடைகளுக்கான நட்டஈடு வழங்கும் செயல்பாட்டில் முறைகேடுகள் நடக்கவில்லை.

பயனாளிகளுக்கு இறந்த அனைத்து கால்நடைகளுக்குமான இழப்பீடு வழங்கப்படவில்லை. அந்தளவுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. கிடைக்கப்பெற்ற நிதியை பயனாளிகளின் இழப்பீட்டுக்கு ஏற்பவே வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இலங்கைக்கு கடத்த முயன்ற 7 இலட்சம் சிகரெட்கள் மீட்பு

சென்னை, ஏப். 19

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டம், புதுமடம் கடற்கரை ஊடாக இலங்கைக்கு படகு மூலம் கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 91 இலட்சம் ரூபாய் பெறுமதியான 7 இலட்சம் வெளிநாட்டு சிகரெட்கள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் என்பனவற்றை மெரைன் பொலிஸார் நேற்றுப் பறிமுதல் செய்தனர்.

புதுமடம் கடற்கரை வழியாக இலங்கைக்கு கடல் மார்க்கமாக பொருட்கள் கடத்தப்படவுள்ளதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, நேற்று அதிகாலை ஒரு மணியளவில் புதுமடம் மெரைன் பொலிஸாரும் கீழக்கரை சுங்கத்துறை அதிகாரிகளும் இணைந்து தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது, கடற்கரையில் வாகனமொன்றிலிருந்து மூடைகளை இறக்கிப் பதுக்கிக் கொண்டிருந்த கும்பலை பொலிஸார் சுற்றி வளைத்தனர். இதைக் கண்டதும் அங்கிருந்த சிலர் தப்பியோடிய நிலையில், ஒருவரை மட்டும் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். அங்கிருந்த 35 சாக்கு மூடைகளைச் சோதனை செய்தபோது, அவற்றில் 7 இலட்சம் வெளிநாட்டு சிகரெட்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கைதானவர் புதுமடம் மேற்குத் தெருவைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்தது. பறிமுதல் செய்யப்பட்ட சிகரெட்கள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் என்பனவற்றை மெரைன் பொலிஸார் சுங்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மெரைன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# கட்டைக்காட்டில் நான்கு வீடுகள்மீது தாக்குதல் மேற்கொண்டவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 19

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் நான்கு வீடுகள் மீது கடந்த 15 ஆம் திகதியன்று தாக்குதல் மேற்கொண்டவரை மருதங்கேணி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் நபர் ஒருவரால் நான்கு வீடுகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த நபர் வீட்டின் உடைமைகள், கண்ணாடி, தளபாடங்களை அடித்து சேதப்படுத்தினார்.

குறித்த நபர் அப்பகுதியில் பல நாட்களாக குடும்பங்களை அச்சுறுத்தி வந்ததாகவும் அருகில் வசிக்கும் குடும்பங்களுக்கு பாதுகாப்பில்லாத நிலை தோன்றியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்தனர். இதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட மருதங்கேணி பொலிஸார் சந்தேக நபரை கைது செய்தனர். (எ-08)

# மதவாச்சியில் சடலம் மீட்பு

அநுராதபுரம், ஏப். 19

அநுராதபுரம் மதவாச்சி பகுதியிலுள்ள கால்வாய் ஒன்றிலிருந்து அடையாளம் தெரியாத நபரின் சடலம் ஒன்றை பொலிஸார் மீட்டனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய வெள்ளிக்கிழமை மதவாச்சி பொலிஸ் பிரிவின் வெஹரகல பகுதியிலுள்ள கால்வாய் பகுதிக்குச் சென்றனர்.

இதன்போது, பிரதேச வாசிகளது உதவியுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்து காணப்பட்ட நபரின் சடலத்தை கால்வாயில் இருந்து பொலிஸார் மீட்டனர். சடலத்தில் இடது கை மற்றும் வலது கால் ஆகியன காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# 20 ஆம் திகதி முதல் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஏப். 19

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நாளை 20 ஆம் திகதி முதல் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கு வளிமண்டலவியல் நிலைமைகள் உகந்ததாக காணப்படுகின்றன என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கண்டி, நுவரெலியா, மாத்தளை மற்றும் பதுளை மாவட்டங்கள் தவிர நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் நேற்று அதிகரித்த வெப்பநிலை காணப்பட்டது.

சப்ரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களின் பல இடங்களிலும் அத்துடன் நுவரெலியா மாவட்டத்தின் பல இடங்களிலும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் வறட்சியான வானிலை நிலவக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மன்னார் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் தென்மேற்குத் திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மே மாதம் தடையின்றி எரிவாயு விநியோகம்

## லிட்ரோ நிறுவனம் உறுதி

கொழும்பு, ஏப். 19

மே மாதத்திலும் தடையின்றி எரிவாயு விநியோகத்தை வழங்க முடியும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்துக்காக 20, 500 மெட்ரிக் தொன் எரிவாயு ஏற்கனவே நாட்டுக்கு கிடைத்துள்ளது. மேலும் 17,500 மெட்ரிக் தொன் எரிவாயு கிடைக்கவுள்ளது என்றும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த எரிவாயு கையிருப்புகள் மாலைதீவில் உள்ள மிதக்கும் சேமிப்பு முனையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் லிட்ரோ நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதவிர, மேலதிகமாக 20, 000 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்று தென்னாபிரிக்கா ஊடாக மாலைதீவை நோக்கி வந்துகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்டபடி இந்த பண்டிகை காலத்தில் நுகர்வோரின் தேவைக்கேற்ப போதுமான எரிவாயு சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பண்டிகை காலத்தின் பின்னரும் சந்தைக்கு தேவையான எரிவாயுவை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, ஏப்ரல் 16 முதல் மீண்டும் வழமை போல் எரிவாயு நிரப்பும் மற்றும் விநியோக பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் லிட்ரோ நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

# இலங்கையின் சேவைத்துறை மார்ச் மாதத்தில் விரிவடைவு

கொழும்பு, ஏப். 19

கடந்த பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், மார்ச் மாதத்தில் இலங்கையின் சேவைத்துறை நடவடிக்கை விரிவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்திற்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 59.4 ஆகப் பதிவாகியுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில், நிதிச் சேவைத்துறையில் கடன் வழங்கும் நடவடிக்கைகள் கணிசமான அளவு அதிகரித்துள்ளமை, இந்த வளர்ச்சிக்கு காரணமாகும்.

நாடு முழுவதும், பொதுவான வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயற்பாடுகள், மார்ச் மாதத்தில் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டன.

சித்திரை புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகை காலங்களை முன்னிட்டு, சந்தையில் ஏற்பட்ட அதிகளவான கேள்வி காரணமாக மொத்த மற்றும் சில்லறை வியாபார நடவடிக்கைகள் பெரும் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

பண்டிகைக் காலக் கொள்வனவுகள் மற்றும் நிதி ரீதியான வசதிகள் அதிகரித்தமையே, சேவைத்துறையின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணம் என இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாதுகாப்பு பிரதி அமைச்சரை பதவியிலிருந்து நீக்க கோரிக்கை

கொழும்பு, ஏப்.19

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நியாயமான முறையில் முன்னெடுப்பதற்காக, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவை அந்தப் பதவியிலிருந்து நீக்குமாறு அருட்தந்தை ரொஹான் டி சில்வா அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'நினைவு, வலி மற்றும் நம்பிக்கை: 7 ஆண்டுகளின் பின்னர் நீதியைத் தேடி' எனும் தலைப்பில் ஈஸ்டர் தாக்குதல் குறித்த விசேட அறிக்கை வெளியிடும் நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது.

சமூக மற்றும் சமய மையத்தினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அருட்தந்தை ரொஹான் டி சில்வா,

"தாக்குதல் இடம்பெற்று 7 ஆண்டுகளின் பின்னர் விசாரணைகள் ஒரு சாதகமான திசையை நோக்கி நகர்வதாக தெரிகிறது. எனவே, விசாரணைகளை நியாயமான முறையில் முன்னெடுப்பதற்கான சூழலை உருவாக்க வேண்டியுள்ளது. சர்ச்சைக்குரிய சாய்ந்தமருது சம்பவங்கள் இடம்பெற்ற போது கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக இருந்த தற்போதைய பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவை, விசாரணைகள் நிறைவடையும் வரை அந்தப் பதவியிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்"- என்றார்.

(எ)

# மதுபானம் அருந்த பணம் தராத தாயைக் கொலை செய்த மகன்!

## மட்டக்களப்பில் அதிர்ச்சி சம்பவம்

மட்டக்களப்பு, ஏப். 19

மட்டக்களப்பு, சித்தாண்டியில் மதுபானம் அருந்துவதற்காக 1,000 ரூபாய் பணம் தராத ஆத்திரத்தில், தனது தாயைத் தள்ளி விழுத்திக் கொலை செய்த 19 வயது இளைஞன் கைது செய்யப்பட்டார் என்று சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சித்தாண்டி 4ஆம் பிரிவு, பழைய சந்தை வீதியைச் சேர்ந்த 42 வயதுடைய குமாரசாமி வசந்தா என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவதினம் மாலை 06.00 மணியளவில், சந்தேகநபரான மகன் தனது தாயிடம் மது அருந்துவதற்காக 1,000 ரூபாய் பணம் கேட்டார். தாயார் தன்னிடம் பணம் இல்லை என்று கூறியதால் ஆத்திரமடைந்த மகன், தாயைப் பிடித்து ஆவேசமாக தள்ளினார்.

இதன்போது, நிலைதடுமாறி கீழே விழுந்த தாயின் தலை தரையில் பலமாக மோதியதில், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவத்தையடுத்து தப்பியோடிய இளைஞனை பொலிஸார் தேடிப் பிடித்துக் கைது செய்தனர்.

(எ)

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த அருளுரை



யாழ்ப்பாணம், ஏப்.19

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் நடைபெறும் நிகழ்வு ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று முன்தினம் காலை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

இதில், "பன்னிரு திருமுறையும், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும்" என்னும் ஆன்மீகத் தலைப்பில் தமிழ்நாடு கயிலை அறக்கட்டளை முனைவர் துரைசாமி ஐயா அருளுரை நிகழ்த்தினார்.

கயிலை அறக்கட்டளையின் திருமுறைச் செயல்பாடுகள், சைவசித்தாந்த சுடர், கல்வி நெறி பற்றியும் விளக்கினார்.

பஞ்சபுராணம் மனனம் செய்து பாடியவர்கள், ஒரு திருப்பதிகம் மனனம் செய்து பாடியவர்களும் கயிலை அறக்கட்டளையினால் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், பக்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-08)

# பெண்ணின் தலைமுடியை வெட்டி சித்திரவதை செய்த ஐவர் கைது!

கொழும்பு, ஏப். 19

ராகம பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றினுள் வைத்து பெண் ஒருவரின் தலைமுடியை வெட்டி, சித்திரவதை செய்த சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேகநபர் உட்பட ஐவர் ராகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சமூக வலைத்தளங்களில் பரவிய காணொலி காட்சிகளின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்த ராகம பொலிஸார், பாதிக்கப்பட்ட பெண்ணிடம் வாக்குமூலம் பதிவு செய்த பின்னர், அவரை மருத்துவப் பரிசோதனைக்காக ராகம போதனா மருத்துவமனையில் அனுமதித்தனர்.

சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான 27 வயதுடைய ராகம பகுதியைச் சேர்ந்த பெண் மற்றும் அவருக்கு உதவியாக இருந்த இராஜாங்கனை, கடவத்தை, ராகம மற்றும் திருகோணமலை சீனக்குடா பகுதியைச் சேர்ந்த 20, 21, 22 , 23 வயதுகளையுடைய நால்வர் கைது செய்யப்பட்டனர்.

(எ)

# ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவருக்கு பிணை

கொழும்பு, ஏப். 19

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு நஷ்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அதன் முன்னாள் தலைவர் சரத் கொங்கஹகே மற்றும் முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகம் தேவப்பிரிய அபேசிங்க ஆகியோரை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் தனிப்பட்ட ஊழியர் குழுவினருக்கு, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு புறம்பாக ஆறு பேரை நியமித்ததன் மூலம் கூட்டுத்தாபனத்துக்கு சுமார் 14. 32 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தியதாக சந்தேகநபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளால் மன்றில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதிவான் அஸங்க எஸ். போதரகம, சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்க உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதன்படி, சந்தேகநபர்கள் இருவரையும் தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டதுடன், வெளிநாட்டு பயணத் தடையையும் விதித்தார். அத்துடன், இந்த வழக்கினை மீண்டும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி அழைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அன்றைய தினம் விசாரணைகளின் முன்னேற்றத்தை நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு பணித்திருந்தார்.

(எ)

# 'கரந்தெனிய ராஜு'விடம் 72 மணிநேரம் விசாரணை

கொழும்பு, ஏப். 19

இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்டு, இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பாதாள உலகக் குழுத் தலைவரான 'கரந்தெனிய ராஜு' என்பவரை 72 மணிநேரம் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், குறித்த சந்தேகநபருக்கு எதிராக இலங்கையிலுள்ள நீதிமன்றங்களால் 15 பிடியாணை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 26 வெளிநாட்டுப் பயணத் தடைகளும் விதிக்கப்பட்டுள்ளன. மீட்டியாகொட, கரந்தெனிய, பலப்பிட்டிய மற்றும் தென் மாகாணத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்கள், பாரிய காயங்களை ஏற்படுத்தியமை, கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் ஆயுதக் கடத்தல் போன்ற பல்வேறு குற்றச் செயல்களுக்காக இவர் தேடப்பட்டு வந்தவராவார்.

கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கமல் ஆரியவன்ஷவின் நேரடி மேற்பார்வையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.- என்றார்.

(எ)

# கண் பிரச்னைகள் ஏற்படுவதை தவிர்க்க மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும்

யாழ்ப்பாணம், ஏப். 19

நாட்டில் அதிகரித்துவரும் வெப்ப நிலையால் கண் தொடர்பாக பிரச்னைகள் ஏற்படுவதை தவிர்க்க பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்று யாழ். போதனா மருத்துவமனையின் கண் விசேட மருத்துவர் எம். மலரவன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை ஊடகங்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது அதிகரித்துவரும் வெப்ப நிலையால் வளியில் அதிகரித்துக் காணப்படும் புற ஊதாக் கதிர்களால் கடுமையான தாக்கம் ஏற்படும். இதனால் காலை 08. 00 மணியிலிருந்து மாலை 04.00 மணி வரைக்கும் அவசியமற்று வெளியில் நடமாட வேண்டாம்

அத்துடன் அதிக வெப்பத்தினால் நீர்ச்சத்து அதிகம் தேவை என்பதால் சிறியவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை தேவைக்கேற்ப நீரினை பருக வேண்டும்.

தொப்பி அணிவது, அங்கீகரிக்கப்பட்ட கண்ணாடிகளை அணிவது போன்ற செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

கண்களை கசக்குவது, கைகளால் தேவையற்ற முறையில் கண்களை தொடுவது உள்ளிட்ட விடயங்களை தவிர்ப்பதன் ஊடாக இவ்வாறான நிலைமைகளிலிருந்து கண்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்

கண்கள் அதிகம் பாதிப்பு அடைந்தால் மாத்திரம் மருத்துவமனை மற்றும் சிகிச்சை நிலையங்களை நாட வேண்டும்.

கண் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்- என்றார்.

(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாதாள உலகம் இல்லை அச்சுறுத்த சிலர் முயற்சி

## பாதுகாப்பு பிரதி அமைச்சர் விளக்கம்

கொழும்பு, ஏப்.19

பாதாள உலகம் என்று ஒன்று கிடையாது, சில குழுக்களே உள்ளனர். எம்மை அச்சுறுத்து வதற்காக ஓய்வுபெற்ற இராணு வத்தினரை துப்பாக்கிதாரிகளா கவும், தமது தேவைகளுக்காக வும் பயன்படுத்திக் கொள்கின்ற னர். இது தொடர்பில் அனைத் துத் தகவல்களையும் நாம் தற் போது திரட்டியுள்ளோம் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

கடற்படையினரால் போதைப் பொருளுடன் கைது செய்யப் பட்ட மீன்பிடிப் படகுகள் வெள்ளிக்கிழமை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திக்கோ விட்ட மீன்பிடித் துறைமுகத் துக்குக் கொண்டுவரப்பட்டன. குறித்த நடவடிக்கைகளை கண் காணிப்பதற்காக சென்ற பிரதி அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

"சித்திரை புத்தாண்டின் பின் னர் பணிகளை ஆரம்பிக்கும் போதே போதைப்பொருள் கடத் தல் படகுகளை கைது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



கடந்த கால அரசியல்வாதிக ளின் தலையீட்டுடனும், அனும தியோடும் திட்டமிட்ட முறை யில் உருவாக்கப்பட்ட இந்த போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பு, இன்று எமது இளைஞர்களின் எதிர்காலத்தை சீர்குலைக்கும் கொடிய நோயாக மாறியுள்ளது. ஜனாதிபதியின் தலைமையில் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் இணைந்து சர்வதேச தகவல்க ளின் உதவியுடன் பாரிய நடவ டிக்கைகளை முன்னெடுத்து வரு கின்றனர்.

2025 ஆம் ஆண்டில் மாத்தி ரம் கடற்படையினரால் 75, 000 மில்லியன் ரூபாய்க்கும் அதிக மான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இவ்வரு டம் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 50, 000 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொ ருட்கள் மீட்கப்பட்டன. பாதாள உலகக்குழு செயல்பாடுகளில் போதைப்பொருள் கடத்தலும் ஒருபகுதியாக உள்ளது. திட்ட மிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஒரு தரப்பி னரே இந்த போதைப்பொருள் கடத்தல்களிலும் ஈடுபடுகின்ற னர். பாதாள உலகம் என்று ஒன்று கிடையாது, மாறாக சில துப்பாக்கிதாரிகளே உள்ளனர்.

கடத்தல்களுக்கு ஆதரவாக ஒருசில அரச அதிகாரிகள், சட் டத்தரணிகள், வங்கி அதிகாரி கள் அல்லது கணக்காய்வு அதி காரிகள் மற்றும் எமது பாது காப்புப் பிரிவுகளில் பணியாற்றி யவர்களும் செயல்படுகின்றனர். இவர்களுக்கு எதிராக செயல்ப டுபவர்களை அச்சுறுத்துவதற் காகவே, ஓய்வுபெற்ற இராணு வத்தினரை துப்பாக்கிதாரிக ளாக இவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். எனவே, ஓய்வு பெறும் இராணுவத்தினரை கண்காணிக்கவும், இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுபவர் களை சட்டத்தின் முன் நிறுத்த தேவையான தகவல்களை திரட் டியுள்ளோம்."- என்றார். (எ)

'பொடி பெட்டி' மீதான

# துப்பாக்கி சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது

கொழும்பு, ஏப். 19

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த 'லொகு பெட்டி' என்ப வரின் சகோதரரான 'பொடி பெட்டி' என்பவரைத் துப்பாக் கியால் சுட்டுக் கொலை செய்ய முயன்ற சந்தேகநபர் ஒருவர், அஹூங்கல்ல பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வெள் ளிக்கிழமை கைது செய்யப்பட் டுள்ளார்.

வியாழக்கிழமை காலை அஹூங்கல்ல, லோகன்வத்த மயானத்துக்கு அருகில் ஓட்டோ வில் பயணித்துக் கொண்டிருந்த 'பொடி பெட்டி' என்பவரை நோக்கி, சந்தேகநபர் ரி-56 ரகத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

இது தொடர்பில் அஹூங் கல்ல பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட் டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இர கசியத் தகவலின் அடிப்படை யில், வெள்ளிக்கிழமை இரவு கொஸ்கொட, ஹேகல்ல பகுதி யில் உள்ள விடுதி ஒன்றில் மறைந் திருந்த போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட போது அவரிடமிருந்து 13 கிராம் 760 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொ ருள் மீட்கப்பட்டது. சந்தேகந பர் கொஸ்கொட, பிடிகொட பகுதியைச் சேர்ந்த 45 வயது டையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (எ)

# போதைப்பொருள் ஏற்றிச்சென்ற படகின் உரிமையாளர் கைது!

கொழும்பு, ஏப். 19

சுமார் 400 கடல் மைல் தெற்கே ஆழ்கடலில், கடற்ப டையால் போதைப்பொருட்க ளுடன் கைப்பற்றப்பட்ட பல நாள் மீன்பிடி படகின் உரிமை யாளர் கைது செய்யப்பட்டுள் ளார்.

150 கிலோ கிராமுக்கும் அதி கமான ஹெரோயின் போதைப் பொருளை ஏற்றிச் சென்றபோது கடற்படையால் கைப்பற்றப் பட்ட அந்த பல நாள் மீன்பிடிக் கப்பல், வெள்ளிக்கிழமை காலை டிகோவிட்டா மீன்பிடித் துறை முகத்துக்கு கொண்டுவரப்பட் டது.

கப்பலில் 40 கோடி ரூபாய்க் கும் அதிகமான மதிப்புள்ள போதைப்பொருள் கண்டெடுக் கப்பட்டது.

தெனுவான் புத்தா என்ற பெயருடைய அந்த மீன்பிடி படகில் இருந்த நான்கு மீனவர் கள் கைது செய்யப்பட்டனர். மேலும், படகில் 6 பைகளில் போதைப்பொருட்கள் கண்டெ டுக்கப்பட்டன. (எ)

# குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த கரந்தெனிய ராஜு இலங்கையில்



கொழும்பு, ஏப். 18

இந்தியாவில் கைது செய்யப் பட்ட 'கரந்தெனிய ராஜு' குற் றப் புலனாய்வுத் திணைக்களத் தின் சிறப்பு அதிரடிப் படையி னரால் நேற்று அதிகாலை இலங் கைக்கு கொண்டுவரப்பட்டார்.

கொலை உட்பட 15இற்கும் மேற்பட்ட குற்றங்களுக்காக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ராஜு, சமீபத்தில் இந்தி யாவில் கைது செய்யப்பட்டார்.

இவர், மற்றொரு ஒழுங்க மைக்கப்பட்ட குற்றவாளியான கரந்தெனிய சுத்தாவின் சகோத ரன் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுவர் இடிந்து வீழ்ந்து இராணுவ சிப்பாய் பலி

பொலநறுவை, ஏப். 19

மாதுரு ஓயா இராணுவப் பயிற்சிப் பாடசாலையின் பழைய கட்டடமொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்து இராணு வச் சிப்பாய் ஒருவர் உயிரிழந் தார். நேற்று முன்தினம் நண்ப கல் இந்த விபத்து இடம்பெற் றது.

இவ்வாறு உயிரிழந்தவர் ஜனகசம, மாதிவெல பகுதி யைச் சேர்ந்த 37 வயதுடைய இராணுவ லான்ஸ் கோப்ரல் ஆவார்.

சம்பவம் தொடர்பில் அரல கங்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# பிள்ளைகளை காப்பாற்ற சென்ற தந்தை நீரில் மூழ்கி உயிரிழந்தார்

அநுராதபுரம், ஏப். 19

மிஹிந்தலை, மருதன்குளம் குளத்தில் நீராடச் சென்ற இரு சிறுவர்களை காப்பாற்றச் சென்ற தந்தை ஒருவர், நீரில் மூழ்கி உயி ரிழந்தார்.

நேற்று முன்தினம் மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் மருதன்குளம் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் தனது நண்பர் ஒருவருடன் குளத்துக்குச் சென்றி ருந்த போது, அங்கு நீராடிக் கொண்டிருந்த தனது மகன் மற் றும் மற்றொரு சிறுவன் நீரில் மூழ்குவதை கண்டார்.

அவர்களை காப்பாற்றுவதற் காக அவர் குளத்தில் குதித்த போது, எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இருப்பினும், 11 மற்றும் 12 வயதுடைய அந்த இரு சிறுவர் களும் எந்தவித ஆபத்துமின்றி காப்பாற்றப்பட்டனர். (எ)

# கூர்மையான ஆயுதத்தால் தாக்கி 22 வயது இளைஞன் படுகொலை!

மாத்தறை, ஏப்.19

வெலிகம, பரணகடே பகுதி யில் வெள்ளிக்கிழமை இரவு கூர் மையான ஆயுதத்தால் தாக்கப் பட்டு இளைஞன் ஒருவர் படு கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞனே உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞன் தனது தாய், தந்தை, இரு சகோதரர்கள் மற்றும் தாயின் மூத்த சகோதர ருடன் (மாமனார்) ஒரே வீட்டில் வசித்து வந்தார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த இளைஞனுக்கும் அவரது தாயின் மூத்த சகோதரருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க் கம் முற்றியதில், மாமன் கூர்மை யான ஆயுதத்தால் மருமகனை தாக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த இளைஞன் உயிரிழந்தார் என்று ஆரம்பகட்ட பொலிஸ் விசார ணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்து டன் தொடர்புடைய 58 வயது டைய சந்தேகநபர் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை வெலிகமை பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (எ)

கல்முனை வடக்கு மருத்துவமனைக்கு

# புதிய அபிவிருத்தி குழுவை நியமிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஏப். 19

கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனைக்கு புதிய அபிவி ருத்தி குழு நியமிக்கப்பட வேண் டும் என்று ஜனாதிபதி அநுரகு மார திஸநாயக்கவை அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் எழுத்துமூலம் கோரியுள்ளது.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சந்திரசே கரன் ராஜனை தலைவராக கொண்டு நியமிக்கப்பட்டுள்ள 16 உறுப்பினர்கள் கொண்ட் குழு செல்லுபடியற்றது என்று பிரகடனப்படுத்த வேண்டும் என் றும் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
19.04.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## இதை முன்கூட்டியே செய்திருக்கலாம்...!

மின்சார உற்பத்திக்கான நிலக்கரி இறக்குமதியில் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் வலு. சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டு சரியாக ஒரு வாரம் கடந்த நிலையில் அவரும் அவரது அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபாலவும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை தங்களது பதவிகளில் இருந்து விலகியிருக்கிறார்கள்.

நிலக்கரி இறக்குமதிகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க நியமித்திருக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு பக்கச் சார்பற்ற முறையிலும் சுயாதீனமாகவும் விசாரணைகளை நடத்துவதற்கு வசதி செய்வதற்காகவே பதவிகளைத் துறந்ததாக இருவரும் கூறியிருக்கிறார்கள்.

தரங்குறைந்த நிலக்கரியை இறக்குமதி செய்தாகவே அமைச்சர் ஜயக்கொடி மீது எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தரம் குறைந்தது என்பதை பாராளுமன்றத்தில் ஒத்துக்கொண்ட ஜனாதிபதி திசநாயக்க அந்த நிலக்கரி கொள்வனவு தொடர்பான நடைமுறைகளில் முறைகேடு எதுவும் இடம்பெறவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். அமைச்சர் ஜயக்கொடியை பாதுகாப்பதற்கு அரசாங்கம் அதனால் இயன்றவரை முயற்சித்தது என்பதில் சந்தேகமில்லை.

தற்போது ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் சுயாதீனமாக நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டிய அவசியத்தை காரணம் கூறி அமைச்சர் பதவி விலகிய பின்புலத்தில் ஒரு வாரத்துக்கு முன்னர் அவருக்கு சார்பாக முக்கிய அமைச்சர்கள் உட்பட அரசாங்க உறுப்பினர்கள் ஒரு நாள் முழுவதும் செய்த வாதங்களின் தகுதி குறித்து இயல்பாகவே கேள்வி எழுகிறது.

ஜெயக்கொடியின் பதவி விலகலைத் தொடர்ந்து செய்தியாளர்களுடன் பேசிய வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத், "நாம் எதையும் மறைக்க விரும்பவில்லை. நிலக்கரி கொள்வனவில் உகந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. சக்தி. வலு அமைச்சரின் அமைச்சரின் நேரடி ஈடுபாட்டுடன் எந்தவிதமான ஊழலோ அல்லது முறைகேடோ இடம்பெறவில்லை. வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதையும் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு ஜனாதிபதி ஆணைக்குழு நடத்தவிருக்கும் விசாரணைகள் ஆறு மாதங்களில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.


ஜனாதிபதி ஆணைக்குழு 2009ஆம் ஆண்டில் இருந்து நிலக்கரி இறக்குமதியில் இடம் பெற்றிருக்கக்கூடிய முறைகேடுகள் குறித்து விசாரணை செய்யவிருப்பதாக கூறப்படுகிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இடம்பெற்ற நிலக்கரி இறக்குமதி தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதற்கு முன்னதாக பதினேழு வருடங்களாக இடம் பெற்றுவந்த நிலக்கரி இறக்குமதி விவகாரங்கள் குறித்து விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதிக்கு ஏன் வரவில்லை?

அமைச்சர் ஜயக்கொடியின் பதவிவிலகல் காலந்தாழ்த்தி வந்திருக்கும் ஒரு கண்துடைப்பு என்று எதிரணி அரசியல்வாதிகள் விமர்சனம் செய்கிறார்கள்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் ஊழல், முறைகேடுகள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களின் பேரில் பதவி விலகியிருக்கும் முதன் முதலான முக்கிய அமைச்சர் ஜயக்கொடி என்பது குறிப்பிடத்தக்கது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்த கையோடு சுயாதீனமான விசாரணைக்கு வழிவிட்டு பதவிவிலக அவர் ஏன் முன்வரவில்லை? அதை முன்கூட்டியே செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

# எதிர்காலத்தில் அரசியல் கைதுகளையும் எதிர்கொள்ள தயாராக இருக்கவேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா கருத்து



*யாழ்ப்பாணம், ஏப். 19*

அரசியல் வாழ்வில் சவால்கள் சகஜமானது. அந்தவகையில், எதிர்காலத்திலும் அரசியல் கைதுகள் கூட இடம்பெறலாம்.

அவ்வாறான சூழல் ஏற்பட்டாலும் கட்சியின் செயற்பாடுகளை வீரியமுடன் முன்னெடுத்துச் செல்வதற்கு கட்சி உறுப்பினர்கள் தயாராக இருக்க வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.

கட்சியின் யாழ் மாவட்ட தலைமை அலுவலகத்தில் யாழ் - கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், நிர்வாக மற்றும் உதவி நிர்வாக செயலாளர்கள், பிரதேசங்களின் நிர்வாக மற்றும் உதவி நிர்வாக செயலாளர்கள், முக்கியஸ்தர்களின் பிரசன்னத்துடன் நடைபெற்ற கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

கடந்தகால சேவைகள் மற்றும் அரசியல் நகர்வுகளின் அடிப்படையில் சமகால அரசியல் களத்தில் ஈ.பி.டி.பியின் தேவை அதிகமாக உணரப்படுகின்றது. இதை மக்களின் உணர்வுகளூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

இதேநேரம் கட்சியின் கொள்கையை நேர்த்தியாகவும் அதை வெளிப்படையாகவும் முன்கொண்டு செல்ல எவர் முன்னின்று உழைத்தாலும் அவர்கள் கட்சியுடன் இணைந்து பயணிக்க முடி யும்.

அத்துடன் கட்சியின் அடுத்த தலைமையை கட்டியெழுப்பும் முயற்சியும் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் கட்சி நலனும் கட்சி செயற்பாடுமே ஒவ்வொருவரதும் முதன்மையாக இருக்கவேண்டும். அதனூடாகவே மக்களின் எதிர்காலத்தையும் அபிலாசைகளையும் வெற்றிகொள்ள முடியும்-என்றார். (அ)

## கிளிநொச்சியில் 13 வயது சிறுவனை காணவில்லை!

*கிளிநொச்சி, ஏப். 19*

கிளிநொச்சி - பொன்நகரைச் சேர்ந்த 13 வயதான சிறுவன் ஒருவன் கடந்த 13ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாகத் பெற்றோர் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சித்திரை புத்தாண்டு புத்தாடைகள் கொள்வனவு செய்வதற்காகச் சென்றிருந்தவேளையில், தண்ணீர் குடிப்பதற்காகச் சென்ற குறித்த சிறுவன் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. பொன் நகர், கிளிநொச்சியை சேர்ந்த பஸ்மின் நவீத் என்ற சிறுவனே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

சம்பவம் குறித்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் வேளை, பொதுமக்களின் உதவியையும் குடும்பத்தினர் நாடியுள்ளனர்.

சிறுவன் தொடர்பான தகவல் தெரிந்தால் 0771824506 என்ற தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு உறவினர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ)

## கேவில் வீதி புனரமைக்கப்படவில்லை

*யாழ்ப்பாணம், ஏப். 19*

வடமராட்சி கிழக்கு கேவில் பிரதான வீதிக்காக நிதி ஒதுக்கப்பட்டு நான்கு மாதங்களாகியும் புனரமைக்கப்படாமல் காணப்படுவதாக பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நான்கு மாதங்களுக்கு முன்பு அரச நிதியில் கேவில் பிரதான வீதி புனரமைப்பு செய்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவனால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. உடனடியாக வேலைகள் ஆரம்பிக்கப்படுமென தெரிவித்திருந்த போதும் நான்கு மாதங்களை கடந்தும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. ஒப்பந்த காலம் முடிவடையும் நிலையில் மழை காலம் ஆரம்பிக்க உள்ளதால் இந்த வருடமும் இந்த வீதி புனரமைக்கப்படாது என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ)

# யாழ்ப்பாணம்-நெடுந்தீவு நிரந்தர குடிதண்ணீர் விநியோகத் திட்டம் 2027 இல் முழுமை பெறும்!

*யாழ்ப்பாணம், ஏப். 19*

யாழ்ப்பாணம்-நெடுந்தீவில் 2015 ஜூனில் சுமார் 105 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம் தற்போது ஓரளவு செயல்பாட்டில் இருப்பதாகவும், அடுத்த ஒரு வாரத்திற்குள் முழுமையான செயல்பாட்டுத் திறனை எட்டும் எனவும் தேசிய நீர் வழங்கல் மற்றும்

வடிகாலமைப்புச் சபையின் வடக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையம் வடிவமைக்கப்பட்ட நாளாந்த கொள்ளளவை அடையாமல், தற்போது சுமார் 60 கன மீற்றர் அளவிலேயே உற்பத்தி செய்து வருகிறது. கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட தொழில்நுட்பச் சிக்கல்களைத் தொடர்ந்து, அவசர காலப் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அடிப்படைச் செயல்பாடுகள் மீட்டெடுக்கப்பட்டு தற்போது நிலைப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவடைந்து வரும் நிலையில், விரைவில் நிலையம் முழுத் திறனுடன் இயங்கும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், நெடுந்தீவின் நீண்டகால குடிதண்ணீர் தேவைக்கான நிரந்தரத் தீர்வாக, 300 கன மீற்றர் நாள் கொள்ளளவு கொண்ட புதிய கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான விரிவாக்கத் திட்டத்தை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தொடங்கியுள்ளது.

2027 ஆம் ஆண்டின் இறுதிக்குள் புதிய நிலையத்தை முழுமையாகச் செயல்பாட்டுக்குக் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வடக்கு உதவிப் பொது முகாமையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த முன்னெடுப்பு, தற்காலிகப் பழுதுபார்ப்புகளில் இருந்து மாறி, நெடுந்தீவில் நிலையான மற்றும் நீண்டகால நீர் முகாமைத்துவ முறையை நோக்கிய முக்கியமான மாற்றமாக அமையும் எனவும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வடக்கு மாகாண உதவி பொது முகாமையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நவீன கல்வியும், பாரம்பரிய அறிவும்...

மதிவதனி

கல்வி என்பது மனித வாழ்வின் அடிப்படை தூணாகக் கருதப்படுகிறது. மனிதன் இறக்கும் வரை கற்றுக்கொண்டே இருக்கிறான் என்பதே கல்வியின் உண்மையான பரிமாணமாகும். ஆனால், கல்வி என்ற சொல் இன்று ஒரு குறிப்பிட்ட அமைப்புக்குள் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது.

பள்ளி, கல்லூரி, பட்டம், வேலை ஆகியவற்றின் சுற்றுப்பாதையில் மட்டுமே அது புரிந்துகொள்ளப்படுகிறது. ஒருகாலத்தில் கல்வி என்பது வாழ்க்கையுடன் இணைந்த ஒன்றாக இருந்தது. மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்வது, சமூக உறவுகளைப் பேணுவது, வாழ்க்கையின் சிக்கல்களைச் சமாளிப்பது, ஒழுக்கநெறிகளைப் பின்பற்றுவது ஆகிய அனைத்தும் கல்வியின் ஒரு பகுதியாகவே இருந்தன.

காலப்போக்கில் சமூக அமைப்புகள் மாறின் தொழில் நுட்ப வளர்ச்சி, தொழில்மயமாதல், உலகமயமாதல் ஆகியவை மனித வாழ்வை வேகமாக மாற்றின. இத்துடன் சேர்ந்து கல்வி முறையும் மாறியது. இன்று கல்வி என்பது பெரும்பாலும் அறிவியல், தொழில்நுட்பம், பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளது. இது தவறானது அல்ல் ஆனால், இது முழுமையானதா என்பது கேள்விக் குறியாகிறது.

நவீன கல்வி, பாரம்பரிய அறிவு-இதில் எது முக்கியம் என்ற கேள்வி எழும்போது, பலரும் இந்த இரண்டையும் எதிர்மறையானவையாகக் கருதுகின்றனர். ஒருபுறம், முன்னேற்றத்தின் அடையாளமாக நவீன கல்வி பார்க்கப்படுகிறது. மறுபுறம் பாரம்பரிய அறிவு பழைமையானதாகவும், சில நேரங்களில் பயனற்றதாகவும் கருதப்படுகிறது. ஆனால், இந்த அணுகுமுறை ஓர் ஆழமான தவறான புரிதலின் விளைவாகும்.

நவீன கல்வி என்பது மனிதனின் அறிவுத் திறனை விரிவாக்கிய மிகப் பெரிய சக்தியாகும். அறிவியல் கண்டுபிடிப்புகள், மருத்துவ முன்னேற்றம், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகிய அனைத்தும் நவீன கல்வியின் பயன்களாகும்.

வாழ்க்கையின் அர்த்தம் என்ன? மகிழ்ச்சி எதில் இருக்கிறது? மனித உறவுகளின் முக்கியத்துவம் என்ன? போன்ற கேள்விகளுக்கு நவீன கல்வி போதிய பதில்களை அளிக்கவில்லை. இந்த இடைவெளியை நிரப்புவது பாரம்பரிய அறிவாகும்.

பாரம்பரிய அறிவு என்பது நூற்றாண்டுகளாக மனித அனுபவத்தின் மூலம் வடிவமைக்கப்பட்டது. இது புத்தகங்களில் மட்டும் இல்லாமல், வாழ்க்கையின் நடைமுறைகளில் பதிந்திருக்கிறது. ஒரு விவசாயி மண்ணைப் பார்த்து மழையைக் கணிக்கும் திறன், ஒரு மூதாட்டி வீட்டிலேயே மருந்து தயாரிக்கும் அறிவு, ஒரு



கலைஞன் தனது கலையை தலைமுறைகளுக்கு பரிமாறும் பண்பு- இவை அனைத்தும் பாரம்பரிய அறிவின் வெளிப்பாடுகளாகும்.

நவீன கல்வி அவசியமானது. அதே நேரத்தில் பாரம்பரிய அறிவும் அவசியமானது. இந்த இரண்டையும் இணைப்பதே நமது எதிர்காலத்துக்கான சரியான பாதையாகும்.

நவீன கல்வியின் அடிப்படை நோக்கம் அறிவை முறையாக அமைத்து பரிமாறுவது மட்டுமல்ல, அதைப் பயன்படுத்தக்கூடிய திறனை உருவாக்குவதாகும். இந்தக் கல்வி முறை தரநிலைப்படுத்தப்பட்ட பாடத்திட்டங்கள், வகுப்பறை கற்றல், தேர்வு முறை, மதிப்பெண் அடிப்படையிலான மதிப்பீடு ஆகியவற்றின் மூலம் செயல்படுகிறது. இது கட்டுப்படுத்தப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி அமைப்பாகும்.

இதன் மிகப் பெரிய பலம் அறிவியல் அடிப்படையாகும். அறிவு என்பது ஆதாரங்களின் அடிப்படையில் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படுகிறது. இதனால், தவறான நம்பிக்கைகள் குறைகின்றன. உண்மையைக் கண்டறியும் திறன் அதிகரிக்கிறது. மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், விண்வெளி ஆராய்ச்சி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, தொடர்பாடல் புரட்சி ஆகிய அனைத்தும் இந்த அறிவியல் அடிப்படையிலான கல்வியின் விளைவுகளாகும்.

நவீன கல்வி மனிதனை அறிவாளியாக மாற்றுகிறது. ஆனால், முழுமையான மனிதனாக மாற்றுகிறதா? இந்தக் கேள்விக்கான பதில், ஓரளவுக்கு இல்லை என்பதாகும். இதனால், நவீன கல்வியை நிராகரிக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, அதை முழுமைப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

இந்த முழுமை பாரம்பரிய அறிவுடன் இணைந்தால் தான் கிடைக்கும். பாரம்பரிய அறிவு பெரும்பாலும் எழுதப்படாத அறிவாகும். அது புத்தகங்களில் மட்டுமல்லாமல், மனிதர்களின் வாழ்வியலில் பதிந்துள்ளது.

பாரம்பரிய அறிவின் அடிப்படை நோக்கம் அறிவியல் சோதனை அல்ல. அனுபவத்தின் அடிப்படையில் செயல்படுவதாகும். இதனால், அது பல இடங்களில் நம்பிக்கைகள், உண்மைகள் கலந்து காணப்படுகின்றன. இதனால், பாரம்பரிய அறிவை முழுமையாக மறுப்பதும் தவறு. அதை விமர்சனமின்றி ஏற்றுக்கொள்வதும் தவறு. மாறாக, அதைப் புரிந்து கொண்டு, அதன் உள்ளார்ந்த மதிப்புகளை எடுத்துக்கொண்டு, தேவையான இடங்களில் நவீன அறிவியலுடன் இணைப்பதே சரியான அணுகுமுறையாகும்.

நவீன அறிவியல் ஒரு மரத்தை வளர்க்கும் தொழில்நுட்பத்தை கற்றுத் தருகிறது. ஆனால், அந்த மரத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவது

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 19.04.2026 - 25.04.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 06

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திதித்துவயம்

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு புது வருடத்தின் முதல் வாரம் அதிகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் போராட்டமாக இருக்கும். சில இடங்களில் வேலையில் சவாலாக இருக்கும். உத்தியோகத்தில் சில மாறுதல்கள் வரலாம். ஆனால் எதிர்பார்த்த உத்தியோக உயர்வு தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். புதிய முதலீடுகளில் தைரியமாக ஈடுபடலாம். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் வரலாம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு சித்திரை மாத முதல் வாரம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சுமையாக இருக்கும் , சில இடங்களில் சுவையாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். தொழிலை மேம்படுத்த தகுந்த நேரம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் மறையும். பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு புத்தாண்டு முதல் வாரம் நன்மையான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடினமாக இருக்கும், சில இடங்களில் சுலபமாக இருக்கும். உத்தியோக ரீதியாக உயர்வும் செல்வாக்கும் கிடைக்கும், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தள்ளி போகலாம். வியாபாரத்தில் பொருள் வரவும் கையிருப்பும் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் நிதானமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த இடையூறுகள் நீங்கி உற்சாகம் பெருகும், பிள்ளைகளால் சில பிரச்சனைகள் வரலாம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு பராபவ வருட முதல் வாரம் மிக அதிகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டமாக இருக்கும், சில இடங்களில் நேர்த்தியாக இருக்கும். உத்தியோக ரீதியாக சங்கடங்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். விற்பனையும் வெற்றியும் பண வரவும் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் கவனமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சிரமங்கள் குறையும். நிம்மதி உண்டாகும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு சித்திரை புத்தாண்டு முதல் வாரம் மிதமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் இருக்கும், சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சற்று சுணக்கமாக நடக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் அதிகரித்து பண வரவு முன்னேற்றமாகும். மூலதனத்தை அதிகரிக்க தகுந்த நேரம் இது.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு தமிழ் புத்தாண்டு முதல் வாரம் மிக மிதமான பலன்கள் இருக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் இல்லாமல் இருக்கும், சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் வருமானமும் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் எச்சரிக்கையாக ஈடுபடலாம். குடும்பத்தில் புரிந்துணர்வு இல்லாத நிலை உண்டாகலாம், பிள்ளைகளால் மன நிம்மதி கிடைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு பராபவ ஆண்டு முதல் வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் உண்டாகும், சில இடங்களில் பதட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில உயர்வு வரலாம், ஆனால் நினைத்த ஒரு காரியம் சற்று தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு வருமானம் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். முரண்பாடுகள் நீங்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு சித்திரை மாத முதல் வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சோதனை உண்டாகும், சில இடங்களில் சாதனை இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிரமங்கள் வரலாம். ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு வேலை மாறுதல் தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி மன அமைதி உண்டாகும், பிள்ளைகளால் மருத்துவச் செலவு வரலாம்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு புது வருடத்தின் முதல் வாரம் மிதமான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சவாலாக இருக்கும், சில இடங்களில் பரபரப்பு நிறைந்ததாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாகலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும், புதிய தொழிலில் நம்பிக்கையாக ஈடுபடலாம். குடும்பத்தில் குழப்பம் விலகி அமைதி அதிகரிக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு தமிழ் வருடத்தின் முதல் வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சவால் உண்டாகும், சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் உடனே நடக்கும். வியாபாரத்தில் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும், தொழிலில் புதிய முதலீடுகளை போட்டு தைரியமாக இறங்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மன கஷ்டம் விலகி குதூகலம் அதிகரிக்கும், பிள்ளைகளால் நிம்மதி பிறக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு சித்திரை புது வருடத்தின் முதல் வாரம் நன்மை தீமை கலந்த பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் கடுமையாக இருக்கும், சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாற்றங்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு லாபம் கிடைக்கும், புதிய முயற்சிகளுக்கு வெற்றிகரமான நேரம். குடும்பத்தில் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும், பிள்ளைகளால் சில பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு பராபவ வருடத்தின் முதல் வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வெற்றிகரமாக இருக்கும். சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில உயர்வுகளை எதிர்பார்க்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் பண வரவு அதிகமாக இருக்கும். புதிய திட்டங்களுக்கு சிறப்பான நேரம் இது. குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் விலகும், பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பலகட்சி ஜனநாயக முறையைக் கொண்ட நாடுகளில் தனிக்கட்சி ஆட்சியை நிறுவுவது சாத்தியமா?



வீரகத்தி தனபாலசிங்கம்

'ஒரு கட்சி ஆட்சி முறையில் நாட்டம் தொடர்பில் அரசாங்கத்தின் மீதான விமர்சனங்கள்' என்ற தலைப்பில் 2026 ஏப்ரில் 5 பிரசுரமான கட்டுரையின் இறுதிப் பந்தியில், 'ஒரு கட்சி முறை என்பது தனியொரு கோட்பாட்டின் ஊடாக அதிகாரத்தைக் குவிப்பதையும் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதையும் நியாயப் படுத்துவதற்கு புரட்சிகளுக்குப் பின்னர் நிறுவப்பட்டு வந்திருக்கிறது. இது தொடர்பாகவும் பல கட்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாராளுமன்ற ஜனநாயகங்களில் ஒரு கட்சி ஆட்சிமுறையைக் கொண்டுவருவது சாத்தியமா என்பது குறித்தும் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் ஆராயப்படும்' என்றும் குறிப்பிட்டிருந்தோம். இன்று அது பற்றி கவனத்தைச் செலுத்துவோம்.

ஆட்சி செய்வதற்கான அதிகாரத்தை ஒரு அரசியல் கட்சி மாத்திரமே கொண்டிருக்கும் ' ஒரு கட்சி அரசுகளாக' உலகில் இன்று கம்யூனிஸ்ட் கட்சிகளினால் அல்லது தேசியவாத இயக்கங்களினால் வழிநடத்தப்படுபடுகின்ற சீனா, கியூபா, வியட்நாம், லாவோஸ், வடகொரியா மற்றும் எரித்திரியா போன்றவற்றையே குறிப்பிட முடியும்.

ஏற்கெனவே கூறப்பட்டதைப் போன்று இந்த நாடுகளில் புரட்சிகள் அல்லது போர்களுக்குப் பின்னர் தனி யொரு கோட்பாட்டின் ஊடாக அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்காகவே ஒரு கட்சி ஆட்சிமுறை பேணப்படுகிறது.

மக்கள் சீனக்குடியரசு என்று அழைக்கப்படும் சீனாவில் இன்று இருப்பது தொழிலாளர்களும் விவசாயிகளும் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் முன்னெடுத்த புரட்சியின் மூலமாக 77 வருடங்களுக்கு முன்னர் நிறுவிய புரட்சிகர அரசு அல்ல. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியே தொடர்ந்தும் ஆட்சியில் இருக்கின்ற போதிலும், சீனா இன்று உலகில் இரண்டாவது பெரிய முதலாளித்துவ பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக மாறி விட்டது.

சீனாவின் ஆளும் வர்க்கம் அந்த பரந்து விரிந்த நாட்டில் அதிகாரக் கட்டமைப்பை இறுக்கமாகப் பேணுவதற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் அகல்விரிவான வலைப் பின்னலைத் தொடர்ந்து பாதுகாத்துப் பயன்படுத்துகிறது.

156 வருடகால பிரிட்டிஷ் காலனித்துவ ஆட் சிக்குப் பிறகு ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கின் கட்டுப்பாட்டை 1997 ஜூலை முதலாம் திகதி சீனாவிடம் கையளித்தது. அந்த அதிகார மாற்றத்துக்காக செய்யப்பட்ட 1984 சீன - பிரிட்டிஷ் பிரகடனத்தில் ஹொங்கொங் அதன் முதலாளித்துவ முறைமையை ஐம்பது வருடங்களுக்கு (2047 வரை) தொடர்ந்து பேணுவதற்கு அனுமதிக்கும் வகையில் ' ஒரு நாடு, இரு முறைமைகள்' என்ற கட்டமைப்பை நடைமுறைப்படுத்த பெய்ஜிங் உறுதியளித்தது.

அந்த உறுதிமொழியின் மெய்யான அர்த்தம் ஐம்பது வருடங்களுக்கு பிறகு ஹொங்கொங் சோசலிச முறைமைக்கு மாறிவிடும் என்பதல்ல, சீனா முற்றாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ முறைமைக்கு மாறி விடும் என்பதேயாகும்.

முற்றுமுழுதான அரசியல் உறுதிப்பாட்டை உறுதி செய்வதற்கும் பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்தவும் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்துக்கு சவால்கள் வருவதைத் தடுப்பதற்காகவும் ஒரு கட்சி முறை அவசியம் என்று கூறி சீனா அதை உறுதியாகப் பேணி வருகிறது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியலமைப்பு ரீதியான ஆதிக்கத்தினால் வரையறுக்கப்பட்டிருக்கும் ஒரு கட்சி முறையை மேற்கத்தைய ஜனநாயகத்துக்கு உறுதி வாய்ந்த ஒரு மாற்றாக சீனா முன்வைக்கிறது. நீண்டகாலத் திட்டமிடல், ஒன்றிணைந்த கொள்கை நடைமுறைப் படுத்தல் மற்றும் ஆட்சியின் பாதுகாப்புக்கு அந்த முறை அவசியம் என்று சீனா வாதாடுகிறது.

தேசிய ஐக்கியத்துக்கும் உறுதிப்பாட்டுக்கும் அதன் தலைமைத்துவம் இன்றியமையாதது என்று நோக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அரச இயந்திர சாதனங்கள் சகல வற்றையும் அதன் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் தனது அதிகாரத்துக்கு சுயாதீனமான எந்தவொரு அமைப்பும் சவால் விடுக்க முடியாதவாறு உறுதிப்படுத்துகிறது.

தனியொரு கட்சி அரசைக் கொண்ட வியட்நாமில் கம்யூனிஸ்ட் கட்சி மாத்திரமே சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஆளும் கட்சியாகும். கம்யூனிஸ்ட் கட்சியே வியட்நாமிய அரசினதும் சமூகத்தினதும் ஒரேயொரு தலைமைத்துவ அமைப்பு என்று அரசியலமைப்பு உறுதிப்படுத்துகிறது.

கியூபாவில் 1959 புரட்சிக்குப் பிறகு சட்டரீதியான அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு கட்சியாக இருந்து வருகிறது. எதிர்க்கட்சிகள் அனுமதிக்கப்படுவதில்லை. அரசை வழிநடத்தும் அதியுயர் அரசியல் நிறுவனம் அதன் மகாநாட்டை ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை நடத்துகிறது. தேசிய சட்டசபைக்கும் மாநகரசபைகளுக்கும் தேர்தல்கள் நடைபெறும் போது கம்யூனிஸ்ட் கட்சியே வேட்பாளர்களை பரிசீலித்து நிறுத்துகிறது.

வடகொரியாவில் தொழிலாளர் கட்சியே ஒரேயொரு ஆளும் கட்சி.

ஒரு கட்சி அரசைக் கொண்ட ஆபிரிக்க நாடான எரித்திரியாவில் ஜனநாயகத்துக்கும் நீதிக்குமான மக்கள் முன்னணி என்ற கட்சியே அதிகாரத்தில் இருக்கிறது. எதியோப்பியாவிடமிருந்து 1993 ஆம் ஆண்டில் சுதந்திரமடைந்த பிறகு ஜனாதிபதி ஐசைஸ் ஆவ்வெர்கியின் எதேச்சாதிகாரத் தலைமைத்துவத்தின் கீழ் இருந்துவரும் அந்த நாட்டில் தேசியத் தேர்தல்கள் ஒருபோதும் நடத்தப்படவில்லை. சட்டபூர்வமான எதிர்க்கட்சி என்று எதுவும் கிடையாது. 1997 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு அங்கீகரிக்கப்பட்ட போதிலும், அது ஒருபோதும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதில்லை. அரசியலமைப்பு 'செத்துவிட்டது' என்று 2014 ஆம் ஆண்டில் பிரகடனம் செய்த ஜனாதிபதி தனது உத்தரவு மூலம் ஆட்சிசெய்து வருகிறார்.



பிரமாண்டமான பெரும்பான்மைப் பலத்தை அரசாங்கம் கொண்டிருக்கின்ற அதேவேளை, எதிர்க்கட்சிகள் முன்னென்றுமில்லாத அளவுக்கு பலவீனப்பட்டிருப்பது ஒரு கட்சி ஆட்சியில் அரசாங்கம் நாட்டம் காட்டக்கூடும் என்ற பீதிக்கு முக்கியமான ஒரு காரணம்.

மாரக்சிய - லெலனிய அரசுகளே ஒரு கட்சி ஆட்சிகளாக படிப்படியாக வளர்ச்சியடைந்ததே வரலாறாக இருப்பதால் அந்த ஆட்சிமுறையின் தோற்றுவாயின் பின்னணி குறித்து விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தொழிலாளர் வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றி 'பிற்போக்குவாதிகளை ஒடுக்கவும் சோசலிசத்தைக் கட்டியெழுப்பவும்' வர்க்க போராட்டத்தின் தவிர்க்கமுடியாத கருவியாக ஒரு கட்சி ஆட்சியை மாவோ சேதுங் நோக்கினார். அந்த ஆட்சியை 'மக்களுக்கான ஜனநாயகம் என்றும் பிற்போக்குவாதிகள் மீதான சர்வாதிகாரம்' என்றும் மாவோ வரையறை செய்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமும் நிலைமாறு காலத்துக்கு உரியவை என்று வாதிட்ட மாவோ, வர்க்கங்கள் இல்லாமல் போகும்போது வர்க்க போராட்டத்தின் சகல கருவிகளும் ( கட்சிகளும் அரசு இயந்திரங்களும்) செயற்பாட்டை இழந்து விடும் என்று கூறினார். கம்யூனிஸ்ட் கட்சியின் கண்டிப்பான ஒழுங்கு கட்டுப்பாட்டை எதிர்த்த கட்சி அதிகாரிகளைத் தாக்குமாறு மக்களைத் ஊக்கப்படுத்தி 1960 களில் மாவோ கலாசாரப் புரட்சியை முன்னெடுத்தார். பிற்காலத்தில் மாவோவை கண்டனம் செய்வதற்கு எதிரிகள் பயன்படுத்திய வலிமையான ஆயுதமாக கலாசாரப் புரட்சிக் கால அத்துமீறல்கள் மாறின.

மாவோவுக்கு முன்னர் ரஷ்யாவில் விளாடிமிர் லெனின் ஒரு கட்சி ஆதிக்கத்தை முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒரு இலக்காக இல்லாமல் ரஷ்யப் புரட்சியின் அவசியமான ஒரு விளைவாகவும் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்த எதிரிகளிடமிருந்து பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாப்பதற்கு தேவையான கருவியாகவும் நோக்கினார். ஒரு கட்சி முறையை நியாயப்படுத்தியபோது லெனின் போல்ஷெவிக் கட்சியை அவர் முதலாளித்துவத்தை தூக்கியெறிவதற்கு அவசியமான தலைமைத்துவத்தை வழங்கிய 'தொழிலாளர் வர்க்கத்தின் முன்னணிப் படை' என்று வர்ணித்தார்.

முதலாளித்துவ ஜனநாயகம் எத்தனை கட்சிகளைக் கொண்டதாக இருந்தாலும் அது முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரமே என்றும் ஒரு கட்சி அரசு தொழிலாளர் வர்க்கத்தைப் பொறுத்தவரை, முதலாளித்துவ ஜனநாயகத்தை விடவும் ஆயிரம் மடங்கு கூடுதல் ஜனநாயகத் தன்மை கொண்டது என்றும் லெனின் வாதிட்டார்.

லெனினுக்கு முன்னர் காரள் மார்க்ஸ் வெளிப்படையாக ஒரு கட்சி அரசுக்காக குரல் கொடுக்கவில்லை என்றும் அத்தகைய அரசை நிறுவுவதற்கான விரிவான நிறுவன ரீதியான கோட்பாட்டையும் அவர் முன்வைக்கவில்லை என்றும் மார்க்சிய அறிஞர்கள் கூறுகிறார்கள்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற பரந்த கோட்பாட்டில் கவனம் செலுத்திய லெனின் தொழிலாளர் வர்க்கம் அதன் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கும் முதலாளித்துவத்தை தூக்கியெறிவதற்கும் தனித்துவமான அரசியல் கட்சியொன்றை அமைக்க வேண்டிய தேவையி ருக்கிறது என்று வாதிட்ட அதேவேளை, மார்க் சிய அரசுகள் பலவற்றில் பிற்காலத்தில் வெளிப்பட் டதைப் போன்ற சர்வாதிபத்திய கட்டமைப்பை அவர் மனதில் கொண்டிருந்தார் என்று கூறமுடி யாது என்றும் அந்த அறிஞர் கூறுகிறார்கள்.

ஆனால், மார்க்ஸின் படைப்புக்கள் அரசாங்கத்தின் கட்டமைப்பு வடிவத்தைத் தெளிவற்றதாக விட்டுச் சென்றுவிட்டன என்று கூறும் அவர்கள் அவரது ஆருயிர் நண்பரான பிரெடரிக் ஏங்கெல்ஸ் நிரந்தரமான ஒரு கட்சி அரசுக்காக குரல் கொடுக்கவில்லை என்று வாதிடுகிறார்கள். சமூகப் புரட்சியின் வெற்றியை உறுதி செய்வதற்காக தொழிலாளர் வர்க்கம் அதற்கு எதிரான சகல பழைய கட்சிகளில் இருந்து முற்றிலும் வேறுபட்ட தனித்துவமான அரசியல் கட்சியாக தங்களை ஒழுங்கமைத்துக் கொள்ளாமல் செயற்பட முடியாது என்று ஏங்கெல்ஸ் நம்பினார்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் கோட்பாடு மார்க்சி யத் தத்துவத்தில் முக்கியமானதாக இருந்தாலும், மார்க் ஸூம் ஏங்கெல்ஸூம் கூட்டாகத் தயாரித்த கம்யூனிஸ்ட் அறிக்கையில் (1848) அந்த பதம் இடம் பெறவில்லை.

பாரிஸ் கம்யூனின் (1871) தோல்விக்குப் பின்னர் மாத்திரமே தொழிலாளர் வர்க்கம் கைப்பற்றிய அதிகாரத்தை நிலை நிறுத்த பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவ வேண்டும் என்று அவர்கள் இருவரும் தங்களது வேறு கட்டுரைகளில் எழுதினார்கள்.

புருசியாவுடனான போரில் பிரான்ஸின் தோல்விக்கு பிறகு 1871 ஆம் ஆண்டில் பாரிஸ் நகரை ஆட்சி செய்த புரட்சிகர அரசாங்கமே பாரிஸ் கம்யூன் என்று அழைக்கப்படுகிறது. பாரிஸ் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து அமைத்த அந்த மதசார்பற்ற, சோசலிச மாநகர ஜனநாயக ஆட்சி 72 நாட்களே ( 1871 மார்ச் 18 - மே 28) நீடித் தது.

பாரிஸ் மாநகரத்திற்குள் மே 21 பிரவேசித்த மூன்றாவது பிரெஞ்சு குடியரசு இராணுவம் ஒரு வாரகாலத்தில் 10 - 20 ஆயிரம் பேரைக் கொன்றொழித்து அந்த முன்னோடி தொழிலாளர் வர்க்க புரட்சிகர அரசை நசுக்கியது. அதற்கு பின்னர் மாத்திரமே தொழிலாளர் வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் அதை நிலை நிறுத்துவதற்கு சர்வாதிகாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கு மார்க்ஸூம் ஏங்கெல்ஸூம் வந்தனர்.

அவர்களின் விளக்கத்தின் பிரகாரம் 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது மார்க்சியத்தின் ஒரு முக்கியமான கொள்கையாகும். இது முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கும் முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்ப்புகளை ஒடுக்குவதற்கும் மற்றும் ஒரு வர்க்கமற்ற சமூகத்தை உருவாக்குவதற்கும் இடைக்காலமாக தொழிலாளர் வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் நிலையைக் குறிக்கிறது. இது 'முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்திற்கு' மாற்றாக அமையும் ஒரு 'தொழிலாளர் அரசு' அல்லது 'பாட்டாளி வர்க்க ஜனநாயகம்' ஆகும். மார்க்சியம் சகல அரசுகளையும் குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் சர்வாதிகாரங்களாகவே பார்க்கிறது.

இனிமேல் பல கட்சிகளைக் கொண்ட பாராளுமன்ற ஜனநாயக முறைமை மிகவும் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வரும் ஒரு நாட்டில் ஒரு கட்சி அரசை நிறுவுவது சாத்தியமா என்பது குறித்து நோக்குவோம்.

இலங்கை அரசு அடிப்படையில் இனத்துவ மேலாட்சித் தன்மையுடையதாக இருக்கின்ற போதிலும், ஆழமாக

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசாங்கத்தைப் பொறுப்புக்கூறச் செய்தல்



கலாநிதி ஜெகான் பெரேரா

சக்தி வலு அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை அரசாங்கம் அதன் பெரிய பாராளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்தித் தோற்கடித்தமை ஆச்சரியமான ஒன்றல்ல. தீர்மானத்திற்கு எதிராக 153 வாக்குகளும், ஆதரவாக 49 வாக்குகளும் அளிக்கப்பட்டன் இது 104 வாக்குகள் வித்தியாசத்திலான வெற்றியாகும்.

நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தினதும் வாக்கெடுப்பினதும் முக்கியத்துவம் அரசாங்கத்தின் பாராளுமன்றப் பெரும்பானமைப் பலத்தின் எண்ணிக்கைப் பலத்தில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை, மாறாக, அது பொது மக்களின் பார்வைக்கு கொண்டு வந்துள்ள நம்பகத்தன்மை மற்றும் கொள்கை மாறாமை குறித்த பெரிய கேள்விகளிலும் தங்கியுள்ளது.

இந்த வெற்றியின் பின்னணியில் இரண்டு முக்கிய காரணிகள் இருந்தன. ஒன்று, எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அமைச்சருக்கு எதிராக வாக்களித்தன. இரண்டாவது, அரசாங்கம் பாராளுமன்றத்தில் 159 ஆசனங்களைக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தால் பாராளுமன்ற வாக்கெடுப்புகளில் வெற்றி பெற முடியுமா என்பது உண்மையான பிரச்சினை அல்ல, மாறாக அதன் மக்கள் ஆணையின் அடிப்படையாக விளங்கும் தார்மீக அதிகாரத்தை அதனால் தக்கவைக்க முடியுமா என்பதே கேள்வியாகும்.


இந்த நம்பிக்கையில்லா பிரேரணை இரண்டு பிரதான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அமைந்திருந்தது. முதலாவது, லங்கா உரக் கம்பனியின் பிரதி கொள்வனவு முகாமையாளராக அமைச்சர் ஜயகொடி பணியாற்றிய வேளையில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு தேவையற்ற அனுகூலத்தை வழங்கியதன் மூலம் அரசாங்கத்திற்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தியதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தாக்கல் செய்த குற்றப்பத்திரிகை தொடர்பானது.


இரண்டாவது குற்றச்சாட்டு, நுரைச்சோலை (லக்விஜய) மின் உற்பத்தி நிலையத்திற்கான நிலக்கரி கொள்வனவு தொடர்பானது. தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டதால் மின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டு நாட்டுக்கு செலவு அதிகரித்துள்ளது. தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி நுரைச்சோலையில் மின்சார உற்பத்தியைப் பாதித்து செலவுகளை அதிகரித்திருக்கிறது என்பதை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவே பாராளுமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

கடந்த கால ஊழல்களை ஒழிப்பதில் அரசாங்கம் காட்டும் உறுதியை பொது மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. பதவியேற்ற காலத்திலிருந்தே இது அரசாங்கத்தின் பலமான புள்ளிகளில் ஒன்றாக இருந்து வருகிறது. குறிப்பாக முன்னைய அரசாங்கங்களின் உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ( சிலர் கைது செய்யப்பட்டனர், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் அல்லது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்) பொதுமக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

இந்த அர்ப்பணிப்பின் காரணமாகவே தற்போதைய சர்ச்சையை மிகவும் கவனமாக கையாள வேண்டியுள்ளது. வெளிப்படைத் தன்மையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கம், அந்த வெளிப்படைத்தன்மை தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் பயன்படுத்தப்படுகிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்த அனுமதிக்க முடியாது. கடந்த கால அரசாங்க உறுப்பினர்களைக் கையாள்வதில் பயன்படுத்தப்படும் அதே நியமங்கள், இன்று பதவியில் இருப்பவர்களுக்கும் பயன்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாக இருக்க வேண்டும். இது குற்றம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பதனால் அல்ல, மாறாக சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்படுகிறார்கள் என்று பொதுமக்களின் நம்பிக்கைகையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

கடந்த கால நடைமுறைகளிலிருந்து ஒரு தீர்க்கமான மாற்றத்தை ஏற்படுத்துவதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நம்பகத்தன்மையானது, தற்போதைய





> **நம்பிக்கையில்லா பிரேரணையின் தோல்வி அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் ஒரு இடைவெளியை வழங்கியுள்ளது. ஆனால் அதற்கு இப்போது தேவையானது மக்கள் மத்தியில் தார்மீக மற்றும் அரசியல் ரீதியான இடமாகும். கடந்த காலத்திற்கு பயன்படுத்தப்பட்ட அதே கொள்கைகள் தற்போதைய காலத்திற்கும் பயன்படுத்தப்படும் என்பதைக் காட்டுவதன் மூலமே அதைப் பெற முடியும்.**

தோல்விகளை அது எவ்வளவு அவசரமாகவும் வெளிப்படையாகவும் எதிர்கொள்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது. தரங்குறைந்த நிலக்கரி தொடர்பாக, கடந்த காலங்களில் இத்தகைய கொள்வனவு எவ்வாறு செய்யப் பட்டது என்பது குறித்தும் விசாரணை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலோட்டமாகப் பார்த்தால், இது அமைப்பு முறைக்குள் நீண்ட காலமாக நிலவும் முறைகேடுகளை இல்லாமல் செய்வதற்கான அரசாங்கத்தின் விருப்பத்தைக் காட்டுகிறது. என்றாலும், மற்றைய அரசாங்கங்களின் கடந்த கால நடைமுறைகள் குறித்த விசாரணை, இந்த அரசாங்கத்தின் தற்போதைய பொறுப்புக் கூறலுக்கு மாற்றாக இருக்க முடியாது. கடந்த கால தவறுகள் குறித்த எந்தவொரு விசாரணையும் தற்போதைய நிகழ்வுகள் குறித்த தெளிவான விளக்கத்திற்குப் பின்னரே வர வேண்டும், அதற்கு முன்னால் அல்ல. மற்றவர்களுக்கு விதிக்கும் அதே நியமத்தை அரசாங்கம் தனக்கும் விதித்துக் கொள்ளத்தயாரா என்பதற்கான ‘அமிலப் பரிசோதனையாக’ இந்த நிலக்கரி சர்ச்சை மாறியுள்ளது.

தரங்குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டது குறித்து ஜனாதிபதி திஸாநாயக்க பகிரங்கமாக ஒப்புக்கொண்டமை, உண்மைகளை நேரடியாக எதிர்கொள்ளும் அரசாங்கம் என்ற பிம்பத்தை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது. பொது நிறுவனங்கள் தொடர்பான பார்ராளுமன்றக் குழு இந்த விவகாரத்தை விரிவாக ஆராய்ந்தபோது, கேள்விப்பத்திர நடைமுறையில் ஒழுங்கான உகந்த வழிமுறைகள் பின்பற்றப்பட்டதாக அரசாங்கம் வாதிட்டது. நடைமுறை இணக்கத்தை நிரூபிப்பதில் ஒரு நியாயம் இருக்கலாம். ஆனால் கொள்வனவுக் கொள்கையின் நோக்கம் வெறும் படிநிலைகளை பின் பற்றுவது மட்டுமல்ல. அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் ஒரு முடிவை எட்டுவதே அதன் ஆழமான நோக்கமாகும். அதன் விளைவு ஒரு பெரிய நிதிச் சுமையாகவும் எரிசக்தி பாதுகாப்பிற்கு பாதிப்பாகவும் மேலதிக சுற்றுச்சூழல் பாதிப்பாகவும் இருந்தால், நடைமுறைகளை மட்டும் காட்டி தப்பித்துவிட முடியாது.

அமைச்சர் ஜெயக்கொடிக்கு எதிராக வாக்களித்த எதிர்க் கட்சியினர் பலர், கடந்த அரசாங்கத்தில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்ட போது அதற்கு மாறாக (அமைச்சருக்கு ஆதரவாக) செயற்பட்டது ஒரு முரண்பாடாகும். இந்த விவகாரங்கள் நீதிமன்றத்தாலும் சம்பந்தப்பட்ட சுயாதீன அதிகார சபைகளாலும் தெளிவுபடுத்தப்படும் வரை அமைச்சர் ஜெயக் கொடியை தற்காலிகமாக ஒதுங்கியிருக் குமாறு அரசாங்கம் தூண்டுவதே சிறந்த வழியாக இருக்கும். இவ்வாறு தற்காலிகமாக ஒதுங்குவது குற்றத்தை ஒப்புக்கொள்வதாகாது, மாறாக அது தனிநபருக்கும் நிறுவனத்திற்கும் ஒரு பாதுகாப்பாக அமையும்.

அமைச்சர் ஜெயக்கொடிக்கு பொறுப்புக்கூறல் கொள்கையைப் பயன்படுத்துவது, அமைச்சரின் நேர்மையையும் அரசாங்கத்தின் நம்பகத்தன்மையையும் பாதுகாக்கும் ஒரு நடவடிக்கையாக அமையும். நீண்ட கால அடிப்படையில் நிலக்கரி இறக்குமதி தொடர்பான விசாரணையை விரிவுபடுத்த அரசாங்கம் விரும்புவதால் இது மிகவும் முக்கியமானது. கடந்த கால தவறுகளை விசாரிப்பது அவசியமானதாகவும் நியாயமானதாகவும் இருப்பினும், தற்போதைய சர்ச்சை குறித்து முழுமையான தெளிவும் பொறுப்புக்கூறலும் உறுதி செய்யப்படுவதற்கு முன்பே கடந்த கால விசாரணைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால், அது உண்மையைத் தேடும் முயற்சியாக அல்லாமல், பிரச்சினையை திசைதிருப்பும் செயலாகப் பார்க்கப்படும் அபாயம் உள்ளது.

இத்தகைய ஒரு கருத்து மக்கள் மனதில் வேரூன்ற அரசாங்கம் இடமளிக்கக் கூடாது. அரசியலில் உத்தியோகபூர்வ விளக்கங்கள் அதனை சரி செய்வதற்கு முன்பே, மக்களின் கருத்துக்கள் வலுவான நம்பிக்கையாக மாறிவிடும்.

தற்போதைய அரசாங்கத்தின் மிகப் பெரிய அரசியல் சொத்து என்னவென்றால், அது தன்னை ஒரு உயர்ந்த தரத்தில் வைத்திருக்கும் என்ற மக்களின் நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கை பலவீனமடைந்தால், கடந்த கால அரசாங்கங்களுக்கு எதிரான ஊழல் வழக்குகளைத் தொடர்வதில் அதற்குள்ள தார்மீக அதிகாரம் குறைந்துவிடும். அரசாங்கம் சம்பாதித்த நம்பிக்கையைப் பாதுகாக்க உதவுவதிலேயே பெரிய தேசிய நலன் அடங்கியுள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணையின் தோல்வி அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் ஒரு இடைவெளியை வழங்கியுள்ளது. ஆனால் அதற்கு இப்போது தேவையானது மக்கள் மத்தியில் தார்மீக மற்றும் அரசியல் ரீதியான இடமாகும். கடந்த காலத்திற்கு பயன்படுத்தப்பட்ட அதே கொள்கைகள் தற்போதைய காலத்திற்கும் பயன்படுத்தப்படும் என்பதைக் காட்டுவதன் மூலமே அதைப் பெற முடியும். இறுதியில், அரசாங்கங்களைப் பற்றிய மதிப்பீடுகள் அவற்றின் பாராளுமன்றப் பெரும்பான்மையினால் அல்ல, மாறாக மற்றவர்களிடம் எதிர்பார்க்கும் அதே கண்காணிப்புக்கு தங்களையும் உட்படுத்திக் கொள்ளும் மனப்பாங்கை அவை கொண்டிருக்கின்றனவா என்பதன் அடிப்படையிலே தீர்மானிக்கப்படுகின்றன.

அரசாங்கம் அந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தால், இந்தச் சர்ச்சை ஒரு அரசியல் பின்னடைவாக அமையாமல் ஒரு வாய்ப்பாக மாறும். தூய்மையான நிர்வாகத்திற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மீதான பொதுமக்களின் நம்பிக்கையை இது ஆழப்படுத்தும். இறுதியில், குறுகிய காலத்தில் தனது உறுப்பினர் ஒருவரைப் பாதுகாத்ததா என்பதை வைத்து மக்கள் அரசாங்கத்தை மதிப்பிடப் போவதில்லை, மாறாக பொது நலன் பாதிக்கப்படும் போது எந்தவொரு அதிகாரியும் கண்காணிப்புக்கும் விசாரணைக்கும் அப்பாற்பட்டவர் அல்ல என்பதை அரசாங்கம் உறுதிசெய்ததா என்பதையே மக்கள் பார்ப்பார்கள்.

முறைமை மாற்றத்தின் பெயரால் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்திற்கு இதுவே உண்மையான பரிசோதனையாகும். பொருளாதார சீர்திருத்தம் மற்றும் தேசிய நல்லிணக்கம் போன்ற கடினமான சவால்களை எதிர்கொள்ளத் தேவையான தார்மீக அதிகாரத்தையும் மக்களின் நம்பிக்கையையும் தக்கவைக்க இதுவே உறுதியான வழியாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நில அடையாளத்தை பாதுகாப்பதே சுயநிர்ணய உரிமையின் மூலவேர்!

பனங்காட்டான்

ஒருவார சமாதான பாதயாத்திரைக்கான காலம் இந்தவார செவ்வாய்க்கிழமை முதல் அடுத்தவார செவ்வாய்க்கிழமை வரை இலங்கையில் இடம்பெறவுள்ளது. அநுரகுமரஅரசாங்கத்தின் தூய்மையான இலங்கை முன்முயற்சி மற்றும் அரசாங்கசார்பு நிறுவனங்களின் ஆதரவுடன் இது ஏற்பாடாகியுள்ளது.

இனங்களுக்கிடையில் ஆன்மிக மற்றும் கலாசார நடவடிக்கைகளின் மூலம் நாட்டில் அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவது இதன் நோக்கமென அறிவிக்கப்பட்டுள்ளது. மதங்களுக்கிடையே உரையாடலை ஊக்குவிப்பது இதன் முக்கிய இலக்குகளில் ஒன்று எனவும் முன்மொழியப்பட்டுள்ளது.

பண்ணக்ககரதேரர் தலைமையிலான பன்னிரண்டு பிக்குகள் அடங்கியகுழு இந்தப் பாதயாத்திரையை அநுராதபுரம், தம்புள்ள, கண்டி, கொழும்பு உள்ளிட்ட பல புனித இடங்களை கடந்துசெல்லக்கூடியதாக ஏற்பாடாகியுள்ளது. (இதில் வடக்கு கிழக்கு பகுதிகள் காணப்படவில்லை). பௌத்த பாரம்பரியத்தை முன்னிலைப்படுத்துவது இந்தப் பாதயாத்திரையின் முக்கியமான குறிக்கோள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒருவார பாதயாத்திரைக்கு சமாதானயாத்திரை என்று பெயர். இதற்காக பௌத்தபிக்குகள் பங்குபற்றும் குழு ஒன்று பெயரிடப்பட்டுள்ளது. இவர்கள் யாத்திரை செய்யும் இடங்களில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் இடங்கள் பெயரிடப்படவில்லை. பௌத்த பாரம்பரியத்தை முன்னிலைப்படுத்துவதற்கே இந்த ஒருவாரத்தில் முக்கியத்துவம்.


இவைகளின் ஊடாக என்ன அறியப்படுகிறது? இலங்கை ஒரு பௌத்தநாடு. அவர்களின் பௌத்தம் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். இதற்கான பாதயாத்திரைக் குழுவுக்கு தெரிவானவர்கள் பௌத்தபிக்குகள் மட்டுமே. ஆனால், இதற்குச் சூட்டப்பட்டுள்ள பெயர் சமாதான யாத்திரைவாரம். அதாவது அரசியல் நோக்கத்தோடு அவ்வப்போது பிளவுபட்டிருக்கும் பௌத்தர்களை ஒன்றிணைத்து சமாதானப்படுத்துவதற்கான ஒருவாரமாக இது ஒதுக்கப்பட்டுள்ளது.

அனைத்து மக்களையும் சமமாகமதித்து, அனைத்து மதங்களையும் வேறுபாடின்றி மேம்படுத்துவதே அரசாங்கத்தின் அடிப்படைக் குறிக்கோள் என்று கூறிக்கொள்ளும் தேசிய மக்கள் சக்தி அரசு, சமாதான பாதயாத்திரை வாரம் என்றபெயரில் பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுப்பதை இங்கு அவதானிக்க முடிகிறது.

சிங்களதேச அரசாங்கம் சமாதான பாதயாத்திரை வாரத்தை ஒரு தேசிய நிகழ்வாக மேற்கொள்ளும் வேளையில், தமிழர் பிரதேசங்களில் சிறுபான்மை இனம் ஒன்றின் மதவழிபாட்டுக்கு குந்தகமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதை இங்கு குறிப்பிடவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் காங்கேசன்துறையில் தையிட்டிஎன்ற தமிழ்க் கிராமத்தில் தனியார் காணிகளில் நிறுவப்பட்டுள்ள பௌத்த விகாரையையும், வவுனியா மாவட்டத்தில் வெடுக்குநாறிமலை என்ற தமிழரின் தொன்மையான வழிபாட்டுத்தல இடத்தையும் பௌத்தமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறது. இராணுவத்தினரின் தேவைக்காக பயன்படுத்தப்பட்ட தமிழரின் காணிகளில் தையிட்டி விகாரை நிறுவப்பட்டுள்ளது. வெடுக்குநாறி மலையை தொல்பொருள் திணைக்களம் ஊடாககையகப்படுத்தும் முயற்சிகளுக்கு ஆட்சிபீடம் சட்டபூர்வ அங்கீகாரத்தை வழங்கிவருகிறது.

தையிட்டி விகாரை அங்கிருந்து அகற்றப்படும், அந்தக் காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும்



> இந்தமாதத்தின் 21ம் திகதி முதல் 28ம் திகதி வரையான காலத்தை சமாதான பாதயாத்திரை வாரம் என பிரகடனம் செய்துள்ள சிங்களதேச அரசு, மதங்களுக்கு இடையில் உரையாடல் என்று கூறிக்கொண்டு பௌத்த பாரம்பரியத்தை மேன்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கிறது. தையிட்டி சட்டவிரோத விகாரையும், வெடுக்குநாறிமலையை தொல்பொருள் பிரதேசம் என அறிவித்துள்ளமையும் இதனையே எடுத்துக்காட்டுகிறது.

என்றெல்லாம் ஆட்சித்தரப்பினரால் அவ்வப்போது கூறப்பட்டது. நயினாதீவு மற்றும் ஆரியகுளம் நாகவிகாரைகளின் பீடாதிபதிகள் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு சாதகமான கருத்துகளை தெரிவித்துவந்தனர். எனினும் அநுரகுமர அரசின் அமைச்சர்கள், எம்.பிக்களுக்கிடையில் இதுதொடர்பான ஒருமைப்பாடு இல்லை.

அதேபோன்று, தையிட்டி போராட்டத்தை முன்னெடுத்து வரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியமக்கள் முன்னணிக்கு மற்றைய தமிழ் தேசியகட்சிகளின் ஆதரவு இல்லை. இதனால் காணிச் சொந்தக்காரர்களினதும் பொதுமக்களினதும் ஆதரவோடு தமிழ்த் தேசியமக்கள் முன்னணி போராட்டத்தை தொடர்ந்து வருகிறது. தமிழரசுக் கட்சிஎம்.பியான சிவஞானம் சிறீதரன் இப்போராட்டத்தில் பங்குபற்றி வருகின்றாராயினும் அதனை தமிழரசுக் கட்சியின் ஆதரவு என கூறமுடியாது.

தையிட்டி விகாரையின் காணிச் சொந்தக்காரர்கள் 17 பேர் அதற்கான உறுதிகளோடு இருந்தாலும் அவர்களால் கூட தங்களின் காணிகளை அடையாளம் காணமுடியாதுள்ளது. தையிட்டிவிகாரைப் பகுதிகாணிகளை அளவீடு செய்ய சம்மதித்தால் அக்காணிகளைஅரசாங்கம் சுவீகரிக்கலாம் என்ற நியாயமான சந்தேகம் அவர்களிடம் இருப்பதால் அதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை. மறுபுறத்தில் விகாரை அமைந்துள்ள காணிக்குள் எவரையும் அனுமதிக்கப் போவதில்லையென அதன் தலைமைப் பிக்குசவால் விட்டுள்ளார். இதனால் விகாரைஅகற்றும் போராட்டத்தைதமிழ்த் தேசியமக்கள் முன்னணி தொடர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அடுத்து குறிப்பிட வேண்டியது வெடுக்குநாறிமலை மீதானசர்ச்சை. வவுனியா மாவட்டத்தில் ஒலுமடுவவுக்கு அருகாமையிலுள்ள பாலமொட்டை மற்றும் நைனா மடுவனப்பகுதியில் அமைந்துள்ள இந்த இடத்தில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயம் சுமார் மூவாயிரம் ஆண்டுகளாக பக்தர்களால் பூசிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுவந்தது. இலங்கை தொல்பொருள் திணைக்களம் திடுதிப்பென இந்த இடத்தில் மையல்கொண்டு இதனை தொல்பொருள் பிரதேசம் என பிரகடனப்படுத்தி சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

இந்த இடத்தைவட்டமனபப்பத்தைய விகாரைப் பகுதிஎனவும் தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது. பௌத்த மதக் கூற்றுகளுக்கு ஆதரவாகதொல்பொருள் திணைக்களம் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. நீதிமன்றதீர்ப்பு இங்குதமிழர்களின் வழிபாட்டைஅனுமதித்தபோதிலும் பக்தர்கள் அங்கு கூடுவதைபொலிசார் கட்டுப்படுத்திவந்துள்ளனர். அத்துடன் பௌத்த துறவிகளின் இப்பகுதிக்கான வருகை பெரும் சர்ச்சையைஏற்படுத்தியது. இது பௌத்தமேலாதிக்கத்தை இங்கு உறுதிப்படுத்ததொல்பொருள் திணைக்களம் ஆதரவளிப்பதாககாணப்பட்டது.

பல்வேறு இந்துமத அமைப்புகளும் நிறுவனங்களும் இதுதொடர்பான கண்டனங்களை மேற்கொண்டபோதிலும் அவர்களின் ஆன்மிக கலாசார பாரம்பரியம் இங்கு ஓரங்கட்டப்பட்டே வந்துள்ளது. மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகளை அங்கீகரிப்பவையாக தொடர்ந்து வந்துள்ளன. அநுரகுமர தலைமையிலான தேசியமக்கள் சக்தி ஆட்சியிலும் தொல்பொருள் திணைக்களத்தின் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதே காணப்படுகிறது.

தொல்பொருள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை மற்றும் வனபாதுகாப்பு திணைக்களம் போன்றவற்றின் செயற்பாடுகள் இங்குவாழும் சமூகங்களுக்கிடையே இன மதமோதலை உருவாக்கிவருகின்றன. இத்தகைய தலையீடுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பூராவும் வெவ்வேறு வடிவத்தில் மேற்கொள்ளப்பட்டு தமிழ் மக்களிடையே பெரும் கவலையையும் அச்சத்தையும் ஏற்படுத்திவந்துள்ளது. இங்குள்ள நிலங்களை இராணுவத் தேவைக்காக பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்னாள் தலைவர் சசிகுமார், முன்னாள் செயலாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் மீண்டும் அரச பயங்கரவாத தடுப்புபிரிவால் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். அதற்கு முன்னைய ஆண்டு மகாசிவராத்திரியின்போது இவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதும் கவனிக்கப்படவேண்டியது.

வெடுக்குநாறிமலை என்ற பெயரே தனித்தமிழ் அர்த்தத்தைகொண்டது. கலப்படமற்ற தமிழ்ப்பதம் இது. இங்கு சர்ச்சைக்குரிய தொல்பொருள் தளங்களின் சான்றுகள் காணப்படுவதாக தொல்பொருள் திணைக்களம் கூறினாலும் அதனை நிரூபிக்கக்கூடிய எந்த வாய்ப்பும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால், தொல்பொருளியல் பாதுகாப்பு ஒழுங்கு களின் நடைமுறைகள் வெடுக்குநாறி மலைக்கும் அங்குள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கும் அதன் வழிபாட்டுக்குரிய சமூகத்துக்கும் குறைகளை ஏற்படுத்திவருகிறது.

பௌத்த மதகுருமார்கள் சிறுபான்மை மதசமூகங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்குள் புகுந்துஅவற்றை புனித பிரதேசங்கள் எனவும், பௌத்தஸ்தலங்களை மீட்டெடுத்து வருவதாகவும் விளம்பரப்படுத்தும் தன்மை தமிழர் பிரதேசங்களில் அதிகரித்துவருகிறது. இங்குள்ள பல மாவட்டங்களில் புதிதாக ஆவணப்படுத்தப்படும் இத்தகைய வடிவம் அரசாங்க ஆதரவுடன் இனங்களுக்கிடையில் பிளவுகளை உருவாக்கி காலக்கிரமத்தில் மோதல்களை உருவாக்கிவிடுமென அச்சமடையவைக்கிறது.

ஒருபுறத்தேசமாதானபாதயாத்திரையை உருவாக்கிஊக்குவிக்கும் அநுரஅரசு, முன்னையசிங்களஅரசுகள் எதற்கும் குறையாதவகையில் இன-மத மோதல்களுக்கு வழியமைத்துவலுவூட்டிவருகிறது.

பாடுவது தேவாரம், இடிப்பது சிவன் கோவில் என்று தமிழில் அர்த்தமுள்ள மொழியாடல் ஒன்றுள்ளது. சமாதான வார கொள்கையும் அந்தப் பிரகடனம் தொடர்பான பாதயாத்திரையின் குறிக்கோளும் நடைமுறையில் பௌத்தத்தை மேன்மைப்படுத்தி மற்றைய மதங்களை கீழ்மைப்படுத்துவதாகவே அமைவதை காணமுடிகிறது. இதற்கு உடந்தையாக தொல்பொருள் திணைக்களத்துக்கு முழு உரிமையும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் மூலம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் கதிரைகளை நம்பி அரசியல் வியாபாரம் செய்யும் தமிழ் தேசிய அரசியல்வாதிகள் தங்களுக்குள்ள பொறுப்பை மறந்துவிடக்கூடாது. நில அடையாளத்தை பாதுகாப்பதே சுயநிர்ணய உரிமையின் மூலவேர் என்பதை மறந்தால் மிஞ்சப்போவது எதுவுமாக இருக்காது. ஆண்டாண்டுதோறும் ஒரு சமாதான யாத்திரை வந்துபோகும். தமிழ் நிலம் கொஞ்சம் கொஞ்சமாக அபகரிக்கப்பட்டுசெல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



-யதீந்திரா

# பல்லில்லாத பாம்பும் தீர்வு நோக்கிப் பேசுதலும்

அரசியலில் பேசுதல் என்றால் என்ன? முதல் பார்வையில் இதென்ன கேள்வி, அரசியலை அரிவரியில் இருந்து ஆரம்பிப்பது போன்றல்லவா இருக்கின்றது - முதல் பார்வையில் நீங்கள் இப்படித்தான் எண்ணிக்கொள்வீர்கள். ஆனால் ஈழத் தமிழர் அரசியல் தொடர்ந்தும் அரவரியில்தானே இருக்கின்றது. நமது நிலைமை அரிவரி என்றால், அரிவரியில் இருந்துதானே பாடத்தை ஆரம்பிக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியராக அறியப்பட்ட அன்ரன் பாலசிங்கம் கூறியதாக ஒரு முறை புதுவை இரத்தினதுரை கூறியது நினைவில் உண்டு. அதாவது, ராஜதந்திரம் என்பது மீண்டும் தொடங்கிய இடத்திற்கே செல்வதல்ல என்று பாலா கூறுவாராம் - அரசியலில் பலத்தோடு இருக்கும் போது, இந்தக் கூற்று சரியானதுதான் ஆனால் பலமற்ற நிலையில் எல்லாம் தலைகீழாகிவிடும். பலமற்ற நிலையில் தொடங்கிய இடத்திற்கு எந்தவொரு பெறுமதியும் இருக்கப் போவதில்லை மாறாக, தற்போது எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதே முக்கியமானது.

ராஜதந்திரம் பற்றி ஒரு கவர்சியான கூற்றுண்டு - அதாவது, கல்லு கிடைக்கும் வரையில் நாயோடு பேச்சு வார்த்தை நடத்துவதுதான் ராஜதந்திரம். இங்கு கல்லு என்பது பலத்தை குறிக்கும். எனவே அரசியலில் ஆளும் தரப்போடு பேசுதல் என்பது அடிப்படையில் பலத்தோடு தொடர்பானது மட்டும்தான். பலமில்லையேல் அரசியலில் பேசுதல் என்பதற்கு எவ்வித அர்த்தமும் இல்லை- அப்படியான சூழலில், நாம் வெறும் வார்த்தை யாலங்களிலேயே திருப்திப்பட்டுக் கொள்வோம். இப்போது நமது தமிழர் அரசியல் இருப்பது போன்று.

இப்போதும் தமிழ் மக்களுக்கான அரசியல் கோரிக்கைகளை எவ்வாறு முன்வைக்கலாம் என்று, சட்டத்தரணிகள் சிலர் கூடி ஆராயவுள்ளதாகவும், ஒரு தீர்வாலோசனையை முன்வைக்கப் போவதாகவும் செய்திகளை காண முடிகின்றது. தமிழ் மக்களுக்கு என்ன வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைக்கலாம் - அது நல்லதுதான். ஆனால் இங்கு ஒரு அடிப்படையான கேள்வியுண்டு. அந்தக் கோரிக்கைகளை சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவர்களை இறங்கிவரச் செய்வதற்கு தமிழரிடம் உள்ள பலம் என்ன? சில நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்திருப்பதால் மட்டும் அரசியலில் பேசிவிட முடியுமா? அவ்வாறாயின் கடந்த 77 ஆண்டுகளில் ஏராளமான விடயங்களை அல்லவா தமிழர் அரசியலில் ரீதியில் சாதித்திருக்க வேண்டும்.

ஈழத் தமிழர் அரசியலானது, அதன் வரலாற்று காலம் முழுவதும் கோரிக்கைகளால் நிரம்பியதுதான். கோரிக்கைகளுக்கு எப்போதுமே நம்மத்தியில் பஞ்சம் இருந்ததில்லை. இவ்வாறான

**ஒரு அரசியல் உண்மையை நேர்மையாக சொல்வதாயின், ஈழத் தமிழர் தலைமைகள் என்போரால் இப்போது தென்னிலங்கையோடு பேரம் பேசவே முடியாது. வேண்டுமானால், வார்த்தைகளால் மோதிக் கொள்ளலாம் அதாவது பல்லிலாத பாம்பு சீறுவது போன்று.**

கோரிக்கைகளை முன் வைப்பதில் காலத்திற்கு காலம் பலர் ஈடுபட்டிருக்கின்றனர். இந்த அடிப்ப டையில் நோக்கினால், நம்மத்தியில் விக்கிரமாதித்தியன்கள் காலத்திற்கு காலம், கதைகள் சொல்வதாகவும், அதில் சற்றும் திருப்தியுறாத வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொள்வதாகவுமே நமது காலம் கழிந்திருக்கின்றது. செல்வநாயகம் பண்டாரநாயக்காவோடு பேசிய நாளிலிருந்து, நாங்களும் தொடர்ந்தும் அவ்வப்போது தென்னிலங்கை ஆட்சியாளர்களோடு பேசித்தானே வந்திருக்கின்றோம் - ஆரம்பத்தில் கொஞ்சம் முன்னேற்றம் தெரிவது போல் தெரிவதும், பின்னர் மீண்டும் "பழைய குறுடி கதவைத் திறடி" என்பது போல் அனைத்தும் புஸ்வானமாகிவிடுவதும் தானே இதுவரையான கதை. இந்தக் கதை இனியும் தொடரும் என்பதில் இந்தக் கட்டுரையாளரிடம் எவ்வித சந்தேகமும் இல்லை. ஏனெனில் கோரிக்கைகளை முன்வைத்தில் நீயா, நானா என்று முட்டுப்பட்டுக் கொள்ளும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சியாளர்கள் எவருமே, தங்களிடன் என்ன பலம் உள்ளது என்பது பற்றி சித்தித்துப் பார்ப்பதில்லை. அவ்வாறு சிந்தித்துப் பார்க்க முற்பட்டிருந்தால், பயனற்ற கட்சிச் சண்டைகளில் காலத்தை விரயம் செய்திருக்க மாட்டார்கள்.

சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை அடைய முடியுமா என்னும் கேள்வியின் அடிப்படையில் முன்னைய கட்டுரைகளில் வாதிட்டிருந்தேன். இலங்கைத் தீவில் அதற்கான சாத்தியப்பாடு முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போன்றதாக அமையும் என்பதே எனது திடமான வாதம். அது ஏன் என்பதற்கான அடிப்படையான காரணம் பற்றித்தான் இந்தக் கட்டுரை ஆராய்கின்றது. பேரம் பேசுவதற்கான பலமின்மையே அடிப்படையான காரணமாகும். அதாவது கொடுப்பதற்கு எதுவுமில்லை என்றால் பெறுவதைப் பற்றி யோசித்துப் பயனில்லை.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# தமிழக தேர்தல் களத்தில் முக்கிய காரணியாக தொடர்ந்து செல்வாக்குச் செலுத்தும் சாதியம்

ரி. இராமகிருஷ்ணன்

திராவிட இயக்கத்தின் காரணமாக, தமிழ்நாடு பொதுவாக சாதித் தடைகளைத் தகர்த்த ஒரு சமத்துவ மாநிலமாகக் காட்டப்படுகிறது. ஆனால், தேர்தல் என்று வரும்போது சாதி என்பது மிக முக்கியமான காரணியாகிறது. இதனை இரு திராவிடக் கட்சிகளும் புறக்கணிக்க முடியாது.

திமுக மற்றும் அதிமுக தலைமையிலான கூட்டணிகள் நிறுத்தியுள்ள வேட்பாளர்களின் சாதி விவரங்கள் குறித்த ஆய்வுகளின்படி, மூன்று சமூகங்கள் - வன்னியகுல சத்திரியர் (வன்னியர்), முக்குலத்தோர் (தேவர்) மற்றும் கொங்கு வேளாளர் (கவுண்டர்) - சிம்ம சொப்பனமாகத் திகழ்கின்றன. மொத்தமுள்ள 188 பொதுத் தொகுதிகளில், திமுக தலைமையிலான கூட்டணியின் வேட்பாளர்களில் சுமார் 45 சதவீதமும், அதிமுக தலைமையிலான முன்னணியின் வேட்பாளர்களில் சுமார் 55 சதவீதமும் இந்த மூன்று சமூகங்களைச் சேர்ந்தவர்கள். இது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு முறையே 38 சதவீதம் மற்றும் 47 சதவீதமாக இருந்தது.

இந்த முறை, திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் வன்னியர் மற்றும் கொங்கு வேளாளர் சமூகங்களில் இருந்து தலா 29 வேட்பாளர்களையும், முக்குலத்தோர் சமூகத்திலிருந்து 27 வேட்பாளர்களையும் நிறுத்தியுள்ளன. அதேசமயம் அதிமுக கூட்டணியில் இந்த எண்ணிக்கை முறையே 43, 28 மற்றும் 32 ஆக உள்ளது.

## முரண்பாடுகளின் அம்சம்

அதிமுகவைப் பொறுத்தவரை, இந்த முறை ஒரு முரண்பாடான சூழல் நிலவுகிறது. 1988-2016 வரை கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிடம் வி.கே.சசிகலா நெருக்கமாக இருந்ததால், சில காலத்திற்கு முன்பு வரை இது "முக்குலத்தோரின் கட்சி" என்று கருதப்பட்டது. ஆனால், தற்போதைய தேர்தலில், அகில இந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவரான சசிகலா மற்றும் திமுகவில் இருக்கும் முன்னாள் ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் - இருவரும் முக்குலத்தோர் - கொங்கு வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமிக்கு எதிராகத் தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

பட்டியலினத்தவரைப் பொறுத்த வரை, இரு முன்னணிகளும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 44 தொகுதிகள் தவிர, ஒரு சில பொதுத் தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

ஆச்சரியப்படும் விதமாக, தமிழகத் தேர்தல் அரசியலில் ஒரு சுமையாகக் கருதப்படும் பிராமணர்களை, நாம் தமிழர் கட்சி மற்றும் தமிழக வெற்றி கழகம் ஆகியவை அணுகியுள்ளன. இவை முறையே ஆறு மற்றும் இரண்டு வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. அதிமுக 1991-க்குப் பிறகு முதல்முறையாக பிராமண வேட்பாளர் எவரையும் நிறுத்தவில்லை. திமுக, வழக்கம் போல் இந்த சமூகத்தைச் சேர்ந்த எவரையும் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கவில்லை (எட்டு மாதங்களுக்கு முன்பு அதிமுக முன்னாள் எம்.பி வி. மைத்ரேயனைத் தன் கட்சியில் இணைத்துக் கொண்ட போதிலும்).

## வலுப்பெறும் கருத்து

மாநிலத் தேர்தல்களில் சாதி இன்றும் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டும் முன்னாள் ஐநா தூதரும் அரசியல் எழுத்தாளருமான ஆர். கண்ணன், "நம்மால் சாதியைக் கடந்து செல்ல முடியவில்லை" என்பதை ஒப்புக்கொள்கிறார். சமூக நீதிக்கான முக்கியத்துவம் என்பது முரண்பாடான முறையில் சாதி என்ற எண்ணத்தையே வலுப்படுத்தியுள்ளது. "தேர்தல் அரசியலே அதிகாரத்திற்கான வழி. காங்கிரஸ் காலத்தில் (1967 வரை) நிலப்பிரபுத்துவமும் சாதியும் பிணைந்து கிடந்தன" என்கிறார் அவர்.

"திமுகவின் விஷயத்தில், சாதி அடுக்குமுறை அப்படியே பாதுகாக்கப்படுகிறது. ஆனால் காங்கிரஸ் காலத்தில் செல்வந்தர்களும் நிலச்சுவான்தாரர்களும் முன்னேறியதற்கு மாறாக, இதில் பல்வேறு சாதிகளின் கீழ்மட்டத்தினர் முன்னேற முடிந்தது. அதிமுக நிறுவனர் எம்.ஜி.ஆர் தமிழக அரசியலை இன்னும் ஜனநாயகப்படுத்தினார். இருப்பினும், சில விதிவிலக்குகளைத் தவிர்த்து, எந்தவொரு சமன்பாட்டிலும் சாதியே மையமாக உள்ளது" என்று டாக்டர் கண்ணன் விளக்குகிறார்.

சமூக நீதி குறித்த அரசியல் எழுத்தாளரின் நிலைப்பாட்டை வழிமொழியும் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் கே.ஏ. மணிகுமார், இடஒதுக்கீடு நடவடிக்கை சமூக நீதியைச் சீரற்ற முறையில் விநியோகித்துள்ளதாகக் கூறுகிறார். "முதற்கட்டமாக சில "மேல்சாதி அல்லாத பிராமணர்கள்" இதன் பலன்களைப் பெற்றனர். கவுண்டர்கள், முக்குலத்தோர் மற்றும் வன்னியர்கள் போன்ற சாதியினர் தங்கள் "சாதி ஒற்றுமையைப்" பயன்ப டுத்தி சட்டமன்றம் மற்றும் பிற நிறுவனங்களுக்குள் நுழைந்துள்ளனர்," என்கிறார் அவர்.

அவர்கள் வலுவாக நிலைபெற்றுள்ள நிலையில், ஓரங்கட்டப்பட்டதாக உணரும் பிற சாதி அமைப்புகள் தங்கள் மக்களைத் திரட்ட "சாதி என்ற ஆயுதத்தைப்" பயன்படுத்துகின்றன. இடதுசாரிகளைத் தவிர மற்ற அரசியல் கட்சிகள் தேர்தலின் போது ஆதரவு கோர அனைத்து மட்டங்களிலும் சாதித் தலைவர்களுடன் தொடர்பு கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளன என்று பேராசிரியர் மணிகுமார் கூறினார். அரசியல்வாதிகள் தங்கள் பிழைப்பிற்குச் சாதி முக்கியம் என்று கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

காந்திகிராம கிராமிய நிறுவனத்தின் அரசியல் அறிவியல் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜி. பழனித்துரை, பழமைவாத சாதி கணக்குகளையே பிடித்துக்கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் மீது குற்றம் சாட்டுகிறார். "பொதுமக்கள் பெரும்பாலும் முன்னோக்கிச் சென்றுவிட்டனர், ஆனால் கட்சிகள் மட்டுமே இன்னும் அவர்களுடன் ஈடுகொடுக்கவில்லை," என்கிறார் அவர்.

(தி இந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






நிலாந்தன்

# எது எங்கட படம்?

**இலங்கைத் தீவில, அரசியலில், இன ரீதியாக இரண்டு வேறு நோக்கு நிலைகள் உண்டு. ஊடகப் பரப்பிலும் இரண்டு வேறு ஊடக மையங்கள் உண்டு. திரைத் துறையிலும் ஏற்கனவே சிங்கள மக்களிடம் ஓர் அரசுடைய தரப்பாக ஸ்தாபிக்கப்பட்ட மையம் ஒன்று உண்டு. தமிழ் மக்களும் தங்களுக்கு என்று ஒரு திரைத் தொழில்துறை மையத்தைக் கட்டி எழுப்பலாம்.அது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாகவும் அமையும்.**

யாழ்ப்பாணத்தில் **"நீளிரா"** திரைப்படத்தின் காட்சி ஒன்றுக்கு படத்தின் தயாரிப்பாளரும் நெறியாளரும் வந்திருந்தார்கள். அன்றைக்கு திரையரங்கு நிறைந்திருந்தது. திரைக்காட்சி முடிந்ததும் தயாரிப்பாளரும் திரைக் கலைஞர்களும் மக்களோடு உரையாடினர். அது ஒரு நல்ல உரையாடல். அந்த உரையாடலில் இரண்டு அம்சங்களைத் தொகுத்துப் பார்க்கக்கூடியதாக இருந்தது.

முதலாவது அம்சம்,அங்கு உரையாடிய பலரும் அந்தத் திரைப்படத்தில் யாழ்ப்பாணத்துத் தமிழ் சரியாக உச்சரிக்கப்பட்டிருப்பதை சிலாகித்துப் பேசினார்கள்.அது உண்மை.திரை மாந்தர் யாழ்ப்பாணத்துத் தமிழை பிசகில்லாமல் அப்படியே பேசுகிறார்கள்.அதில் இந்தியத் தமிழ் உச்சரிப்புக் கலந்திருக்கவில்லை. அது அந்தத் திரைப்படத்தின் வெற்றிகளில் ஒன்றாக ஈழத் தமிழர்களால் சிலாகித்துப் போற்றப்படுகிறது.

இதற்குமுன் வெளிவந்த கோடம்பாக்கத்துத் தயாரிப்புகளில் குறிப்பாக ஈழத் தமிழ்க் கதைகளை மையமாகக்கொண்ட கோடம்பாக்கத்துத் தயாரிப்புகளில் இலங்கைத் தமிழ் குறிப்பாக யாழ்ப்பாணத்துத் தமிழ் அல்லது மட்டக்களப்புத் தமிழ் சரியாக உச்சரிக்கப்படுவதில்லை என்ற விமர்சனம் நீண்ட காலமாக உண்டு. நீளிரா அந்த விமர்சனத்திற்குப் பதிலாக வந்திருக்கிறது.

இங்கு ஒரு விடயத்தை இந்த இடத்தில் சுட்டிப்பாகக் கூறவேண்டும். கோடம்பாக்கத்தில் தயாரிக்கப்படும் திரைப்படங்களில் யாழ்ப்பாணத்துத் தமிழ் பயன்படுத்தப்படும் விதம் தொடர்பாகத்தான் இந்த விமர்சனம். ஆனால் இலங்கையிலேயே குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களில் தமிழ் உச்சரிப்புத் தொடர்பாக அவ்வாறான விமர்சனங்கள் பொதுவாக இல்லை. குறிப்பாக ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட சிறிய மற்றும் முழுநீளத் திரைப்படங்களில் உள்ளூர் மொழி அதன் உள்ளூர் தனித்துவத்தோடும் உள்ளூர்த் தனத்தோடும் கொச்சை வழக்குகளோடும் பயன்படுத்தப்பட்டது. எனவே முழு நீளத் திரைப்படங்களில் அல்லது குறும் படங்களில் யாழ்ப்பாணத்துத் தமிழ் சரியாக உச்சரிக்கப்படுவது என்ற விவகாரம் கோடம்பாக்கத்துத் தயாரிப்புகளுக்கே உரியது.

அதேசமயம் அன்றைக்கு கடந்த கலந்துரையாடலில் மேற்படி விடயத்தை பாராட்டிப் பேசிய பலரும் அதை எந்தப் பேச்சு வழக்கில் சொன்னார்கள் என்பது இங்கு கவனிப்புக்குரியது.தமது பிரதேச வழக்கு சரியாக உச்சரிக்கப்பட்டிருக்கிறது என்பதனை அங்கே பாராட்டிய பலரில் குறிப்பாக நடுத்தர வயதை கடந்தவர்கள் அதைத் தமது பிரதேச வழக்கிலேயே சொன்னார்கள்.ஆனால் அதைக் கதைத்த இளைய தலைமுறையினரில் பெரும்பாலானவர்கள் அதனை இந்தியத் திரைப்படங்களிலும்,இந்தியத் தொலைத் தொடர்களிலும்,கோடம்பாக்கத்துத் திரைத் தொழில் துறையின் நீட்சியும் அகட்சியுமாகக் காணப்படுகின்ற தமிழக அரங்குகளிலும், தமிழக நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தப்படுகின்ற சோடிப் படுத்தப்பட்ட, செயற்கையான,நுனி நாக்குத் தமிழில் தான் சொன்னார்கள்.

கதைக்கும்போது சிலஇடங்களில் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச்சொல் இல்லையென்றால் அங்கு ஓரளவுக்கு ஏற்கனவே பரிச்சயமான ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதில் பெரிய விமர்சனம் இருக்கமுடியாது. ஆனால் தான் பேசும் தன் தாய் மொழியையே செயற்கையாக, நுனி நாக்கில் பேசுவது எதைக் காட்டுகிறது? நீளிரா திரைப்படத்தில் அவர்கள் பாராட்டும் விடயத்தை அவர்களில் பலரே பொது வெளியில் பின்பற்றுவதில்லையா?



சமூக வலைத்தளங்களின் பெருக்கத்தோடு தமிழுக்கு புதிய கொச்சை வழக்குச் சொற்கள் கிடைத்திருக்கின்றன.அது மட்டுமல்ல,கோடம்பாக்கத்தில் திரைத் தொழிற் துறையின் நீட்சியும் அகட்சியுமாக காணப்படும் அரங்குகளில் உச்சரிக்கப்படுகின்ற நுனி நாக்குத் தமிழ் அல்லது ஆங்கிலத்தொனி கலந்த சோடிக்கப்பட்ட தமிழ் ஒரு கவர்ச்சியான போக்காக ஈழத் தமிழர்கள் மத்தியிலும் படர்ந்து வருகிறதா?

இது முதலாவது விடயம். இரண்டாவது விடயம் என்னவென்றால்,ஈழ-தமிழக கூட்டுத் தயாரிப்புகளில் ஈழத் தமிழர்கள் தமது தனித்துவத்தைப் பேணுவது தொடர்பானது.அதாவது தமிழகத்தின் பிரம்மாண்டமான திரைப்படச் சந்தைக்குள் ஈழத் தமிழர்கள் தங்களுடைய தனித்துவங்களைப் பேணிக்கொண்டு தம்மை வெற்றிகரமாக ஸ்தாபிப்பது எப்படி என்பது.

அது அவசியமானது. குறிப்பாக,ஈழ-தமிழக கூட்டுத் தயாரிப்புகளில் அதிலும் குறிப்பாக ஈழத்தின் போர்க் கதைகளைப் பேசும் கூட்டுத் தயாரிப்புகளில் ஈழத் தமிழர்கள் தங்களுடைய தனித்துவங்களைப் பேணும் அதேசமயம் கோடம்பாக்கத்தின் மிகப்பெரிய சினிமாச் சந்தைக்குள் தங்களை வெற்றிகரமாக ஸ்தாபித்துக் கொள்ளவும் வேண்டும். தயாரிப்பாளரின் நோக்கு நிலையில் அது வணிகரீதியாகவும் வெற்றிபெற வேண்டும்.

கனதியான கலைப் பெறுமதி மிக்க படங்கள் வணிகச் சினிமாவுக்குரிய பெரும் சந்தைக்குள் வெற்றி பெறுவதில் இருக்கும் சவால்களை நன்கு விளங்கியவராக தயாரிப்பாளர் கார்த்திக் சுப்புராஜ் காணப்பட்டார்.அந்தச் சவால்களோடு சமரசம் செய்து கொள்ளத் தேவையில்லை என்ற பொருள்படவும் அவர் பேசினார்.கலைப் படங்கள் அவற்றுக்கேயான பார்வையாளர்களை நோக்கி வரும். அதில் உண்மையுண்டு.

அதேசமயம் போர் எந்தளவுக்கு "சீரியஸானதோ"-கனதியானதோ அந்தளவுக்கு மக்கள் மயப்பட்டதும்கூட.போர் இலக்கியத்திலும் போர் தொடர்பான திரைப்படங்களிலும் இருக்கும் ஒரு முக்கியமான அம்சம் இது. போர் கனதியானதாகவும் இருக்கும் அதேசமயம் மக்கள் மயப்பட்டதாகவும் இருக்கும். அதனால் போர் தொடர்பான படைப்புக்களுக்கு எப்பொழுதும் மக்கள் மயப்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு. இதை கலை இலக்கிய விமர்சன வார்த்தைகளில் சொன்னால் அது கனதியானதாகவும் இருக்கும் அதேசமயம் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஜனரஞ்சகமானதாகவும் இருக்கும். நீளிரா அப்படி ஒரு நடுவழிப் படந்தான்.

இந்தச் சவால்களை எதிர்கொண்டு ஈழத்துத் திரைத் துறை தன்னை வணிக ரீதியாகவும் ஸ்தாபித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதனை இக்கட்டுரை ஏற்றுக்கொள்கிறது. அதேசமயம் இக்கட்டுரை மற்றொரு விடயத்தின் மீதும் ஈழத் தமிழர்கள் கவனத்தைக் குவிக்கவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

அது என்னவென்றால்,ஈழத் தமிழர்கள் தங்களுக்கென்று ஒரு சினிமாத் தொழில் துறை மையத்தை தங்களுக்கே உரிய அடையாளங்களோடு வலிமையாகக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் செல்வச் செழிப்போடும் பொருத்தமான வளங்களோடும் காணப்படுகிறது. அங்கு ஏற்கனவே புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களுக்கான திரைத் துறையொன்று நம்பிக்கையூட்டும் விதத்தில் தலையெடுத்து வருகிறது.இந்நிலையில் தாயகமும் புலம்பெயர்ந்த தமிழர்களும் இணைந்து ஈழத் தமிழர்களுக்கேயான ஒரு திரைத்துறை மையத்தை இப்பொழுது இருப்பதைவிடவும் பலமாகக் கட்டியெழுப்ப முயற்சிக்கலாம்.

அரசற்ற ஈழத் தமிழர்கள் மத்தியில் அதனை யார் ஒருங்கிணைப்பது என்ற கேள்வி உண்டு. ஏற்கனவே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கருநிலை அரசு கிளிநொச்சியில் பலமாக இருந்த காலகட்டத்தில், அங்கே திருநகர் பகுதியில் ஒரு திரைப்பட வெளியீட்டுப் பிரிவு இயங்கியது.கோடம்பாக்கத்து திரைத் துறை வளங்களோடும் இந்தியாவின் பிரம்மாண்டமான சினிமாச் சந்தையோடும் ஒப்பிடுகையில் அது மிகவும் சிறியது. ஆனால் அதிகம் இலட்சியப்பாங்கானது. அதுமட்டுமல்ல,அது தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான கட்டுமானங்களில் ஒன்றாகவும் கட்டியெழுப்பப்பட்டது.

எனவே நிதிப்பலம் மிக்க புலம்பெயர்ந்த தமிழர்களோடு இணைந்து ஈழத் தமிழர்கள் தங்களுக்கென்று ஒரு திரைத் தொழிற்துறை மையத்தை மேலும் பலப்படுத்துவது தொடர்பாகச் சிந்திக்க வேண்டும்.

கோடம்பாக்கத்திலும் முதலீடு செய்ய வேண்டும்.அது மிகப்பெரிய சந்தை. வணிக நோக்குநிலையில் மட்டுமல்ல, அது ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இடையிலான பிணைப்புகளையும் பலப்படுத்தும். ஏற்கனவே புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரிய முதலாளிகள் சிலர் கோடம்பாக்கத்தில் முதலீடு செய்து வருகிறார்கள். நடிகர் வடிவேலுவுக்கும் இயக்குனர் சங்கருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு உதவியவர் ஓர் ஈழத்து சினிமா முதலீட்டாளர்தான்.அந்த அளவுக்கு புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் கோடம்பாக்கத்தில் செல்வாக்குடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.எனினும் அந்த முதலீடுகள் அதிகம் வணிக நோக்கிலானவை.ஈழத் தமிழ் அரசியலை அதிகம் பேசாதவை.

எனவே ஈழ-தமிழக கூட்டுத் தயாரிப்புகளும் தேவை.அதேசமயம் ஈழத் தமிழர்கள் பலம் பொருந்திய புலம்பெயர்ந்த சமூகத்தோடு இணைந்து தங்களுக்கேயான ஒரு திரைத் தொழில் துறையை மேலும் பலப்படுத்தலாம். அது ஈழத்தமிழ் நோக்குநிலையில் தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாகவும் அமையும்.

இலங்கைத் தீவில, அரசியலில், இன ரீதியாக இரண்டு வேறு நோக்கு நிலைகள் உண்டு.ஊடகப் பரப்பிலும் இரண்டு வேறு ஊடக மையங்கள் உண்டு. திரைத் துறையிலும் ஏற்கனவே சிங்கள மக்களிடம் ஓர் அரசுடைய தரப்பாக ஸ்தாபிக்கப்பட்ட மையம் ஒன்று உண்டு. தமிழ் மக்களும் தங்களுக்கு என்று ஒரு திரைத் தொழில்துறை மையத்தைக் கட்டி எழுப்பலாம்.அது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாகவும் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பதவிகளுக்காகப் பந்தாடப்படும் தமிழ்த் தேசியமும் துரோகிப்பட்டமும்!



- கந்தையா அருந்தவபாலன்

**விடுதலைப்புலிகள் வன்முறையாளர்கள், இனச்சுத்திகரிப்பாளர்கள், அவர்களின் கடத்தல்களும் விசாரிக்கப்படவேண்டும், இனப்படுகொலை என்று சொல்லமுடியாது என்று சத்தியம் செய்த சுமந்திரனை அன்ரன் பாலசிங்கத்துக்கு நிகரானவரான ஏற்க முடியுமென்றால் சந்திரகு மாரையோ அல்லது வேறு எவரையோ ஏற்பதில் அதிக சிரமமிருக்காது.**

சுதந்திரத்துக்குப் பின்னரான ஈழத்தமிழர் அரசியலில் அதிகம் பயன் படுத்தும் சொற்றொடர்கள் எனில் அவை தமிழ்த் தேசியம் மற்றும் தமிழினத் துரோகி என்பவையாகவே இருக்கமுடியும். அதுமட்டுமன்றி நாட்டில் இனப்பிரச்சினையின் விரிவுடன் இவ்விரு சொற்றொடர்க ளின் பயன்பாடும் விரிவடைந்து வந்துள்ளதையும் காணமுடியும். தேசிய இனம் என்ற அடிப்படையில் ஈழத்தமிழர்களது தேசியம்சார் பண்புகளை வரையறுப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட தகுதிவிதிகள் காணப்பட்டாலும் துரோகி என்பதை வரையறுப்பதற்கு எவ்வகையான தகுதிவிதிகளை அரசியல்வாதிகள் கையாள்கிறார்கள் என்பது இன்று வரை புரியாத புதிராகவே இருந்து வருகிறது. ஒருவருக்குத் துரோகிப் பட்டம் சூட்டுவது மட்டுமன்றி தமிழ்த் தேசியம், தமிழ்த்தேசியக் கட்சிகள் என்பனவும்கூட ஒவ்வொ ருவரும் தமக்கேற்றபடி வரையறுத் துக்கொள்ளும் சொற்களாகவே மாறிவிட்டன. இத்தகைய போக்கின் அண்மைய வெளிப்பாடுதான் நாடா ளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மீளவும் ஒருமுறை சந்திரகு மாருக்கு வழங்கியுள்ள துரோகிப்பட் டம்.

தமிழ் அரசியல் கட்சியொன்று அல்லது அதன் தலைவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் சேராதிருக்கும் சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துடன் சேர்ந்திருப்போர் அவர்களின் பார்வையில் தமிழினத்துரோகிகள். ஆனால் அவ்வாறு கூறிய தலைவர்கள் பின்னர் அரசாங்கத்துடன் சேர்ந்திருந் தால் துரோகிகளல்லர், அவர்கள் தமிழ்த் தேசியவாதிகள். இவ்வாறுதான் 1980 க்கு முன்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சி மக்களுக்குச் சொல்லிக்கொடுத் தது. அந்த அடிப்படையில்தான் ஜி.ஜி. பொன்னம்பலமும் அவரது கட்சியின ரும் துரோகிகளென்றும் தமிழரசுக்கட் சியினர் தேசியவாதிகளாகவும் சொல் லப்பட்டனர். துரோகியான ஜி.ஜி தமிழர் விடுதலைக் கூட்ணிக்குள் வந்ததும் தேசியவாதியாகிவிட்டார். ஆயுதப் போராட்ட காலமும்கூட இதற்கு விதிவிலக்கானதல்ல. யுத்த காலத்திலும் அதன்பின்னரும் துரோகிப் பட்டத்துடன் ஒட்டுக்குழு என்ற புதுச் சொல்லும் சேர்ந்து கொண்டது. யுத்தத்துக்குப் பின்னரான காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங் கத்துடன் சேராதிருந்த காலத்தில் அரசாங்கத்துடன் சேர்ந்திருந்த டக்ளஸ் போன்றவர்கள் துரோகிகள். பின்னர் அவர்கள் நல்லாட்சி என்று கம்பரெலி யாவுடன் கலந்தபோதும் துரோகிகளாக அழைக்கப்படவில்லை. ஏனெனில் அந்தச் சொற்களின, பிதாமகர்களே அவர்கள்தானே.

ஆனால் முன்னர் தமிழரசுக்கட்சியும் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பும் அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்த நல்லாட்சிக்காலத்திலும்சரி, எதிரானவர்களாக நடித்த மகிந்த காலத்திலும்சரி தாமே உருவாக்கிக் கொண்ட துரோகிப் பட்டம் தம்மீது விழுந்துவிடும் என்பதற்காக அமைச்சுப் பதவிகளை மட்டும் எடுக்கவில்லை. ஆனால் அதைவிடக் கூடுதலான வரப்பிரசாதங்களை அக்காலத்தில் அவர்கள் பெற்றுக் கொண்டனர். டக்ளஸ் அல்லது அங்கஜன் ஜனாதிபதியையோ அல்லது அமைச்சர்களையோ வடக்கில் வரவேற்றால் அது தமிழர்க்கு துரோகமானது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவ்வாறு வரவேற்பதுவும், தமது வீட்டு பிறந்தநாளுக்கு அழைத்து மகிழ்வதும் தமிழ்த் தேசியம் சார்ந்தது. இது போலவே யுத்த காலத்தில் இராஜவ ரோதயம் சம்பந்தனுக்குத் தேசிய தலைவராகத் தெரிந்த பிரபாகரன் பின்னர் பயங்கரவாதியாகவும் அரச பயங்கரவாதியாகத் தெரிந்த மஹிந்த ராஜபக்ஷ பின்னர் தேசிய தலைவரா கவும் மாறினார்கள். அதுமட்டுமன்றி தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குள் இருக்கும்வரை ரெலோ, ஈபிஆர்எல்எவ், புளொட் என்பன தமிழ் தேசியவாதிகள். அதற்கு வெளியில் விட்டபின் அவர்கள் ஒட்டுக்குழுக்கள். அவ்வாறு கூறியவர் களுக்கு இப்போது அவர்களின் தேவை அவசியப்படும்போது மீண்டும் அவர் கள் தேசியவாதிகளாக மாறிவிட்டனர். முன்னர் தீண்டத்தகாதவர்களாக இருந்த வர்கள் பின்னர் உள்ளூராட்சி மன்றங்க ளுக்காகப் புனிதர்களாக மாறிவிட் டனர். முன்னர் பயங்கரவாதிகளாகத் தெரிந்த போராளிகள் இப்போது சிலருக்கு தியாகிகள். இவ்வாறு நமது அரசியல் தலைவர்களின் துரோகிகள், ஒட்டுக்குழுக்கள், தேசியவாதிகள், பயங்கரவாதிகள், தியாகிகள் வகைப்ப டுத்தல்கள் எல்லாம் அவரவர் நலன்சார் ந்ததே அன்றி மக்கள் நலன்சார்ந்தவை யல்ல. கோட்பாட்டு ரீதியானவையும் அல்ல. அவ்வாறு இருக்கவும் முடியாது.

சந்திரகுமார் மீது சிறீதரன் முன்வைக்கும் பிரதான குற்றச்சாட்டு இனப்படுகொலை அரசாங்கத்துடன் இணைந்திருந்து அதற்கு ஆதரவான செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்பது. அதனால் அவர்களுடன் இணைந்து





அரசியல் செய்ய முடியாது என்பது. அது உண்மையானது எனக்கொண் டால் இதேபோல இறுதி யுத்தம் வரையும் அரசாங்கத்துடன் துணை இராணுவக்குழுவாகச் செயற்பட்ட புளொட்டை 2013 இல் கூட்டமைப் புக்குள் உள்வாங்கும்போது இது போன்ற எதிர்ப்பை சிறீதரன் ஏன் வெளியிடவில்லை? சித்தார்த்தனுக்கு ஏன் துரோகிப்பட்டம் வழங்கவில்லை? பின்னர் மஹிந்தவின் செல்லப்பிள்ளை சாணக்கியனை தனது சொந்தக் கட்சிக்குள்ளேயே உள்வாங்கியபோது ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை? கூட்டமைப்பாக அவர்களுடன் இணைந்து அரசியல் செய்ய முடியாது என்று ஏன் ஒதுங்கவில்லை? இன்று அவரின் தலைமையின்கீழ் பாரா ளுமன்றத்தில் செயற்படமுடியாது என்று ஏன் கொடிபிடிக்கவில்லை? துரோகிப்பட்டத்துக்கான தகுதி விதிகள் எல்லோருக்கும் ஒன்றுதானே. ஏனெனில் சித்தார்த்தனாலோ அல்லது சாணக்கியனாலோ தனது கிளிநொச்சி வாக்கு வங்கிக்கு எந்தச் சேதாரமும் ஏற்படாது என்பதும், சந்திரகுமாரை உள்வாங்குவது தனது அடிமடியில் கை வைப்பதைப் போன்றது என்பது சிறீதரனுக்கு நன்றாகவே தெரியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றம் எமக்கு ஒரு பாடத்தைத் தருகிறது. கூட்டமைப்புக்குள் உள்வாங்கிய போராளிக்குழுக்களான ரெலோ மற்றும் ஈபிஆர்எல்எவ் போன்றன அரசாங்கத்துடனான தமது உறவை மட்டுப்படுத்தி தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் இன்றுவரை பயணிக் கின்றன. உள்வாங்கப்படாத புளொட் டும் ஈபிடிபியும்தான் இறுதிவரை அரசாங்கத்துடன் இணைந்திருந்து தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் பலவற்றில் ஈடுபட்டு வந்துள்ளன. தொடக்கத்திலேயே இவர்களையும் கூட்டமைப்புக்குள் உள்வாங்கியிருந்தால் சிலவேளை துரோகிப்பட்டம் தேவையற்றதாக மாறியிருக்கக்கூடும். எனவே வெளியில் விடுவதைவிட உள்ளே இருப்பது நன்மையாகவும் அமையலாம். போராளிகளின் அரசியல் கட்சி சந்திரகுமாருடன் கூட்டு வைத்துள் ளார்கள். நூற்றுக்கணக்கான போரா ளிகள் சந்திரகுமாரின் பின்னால் நிற்கின் றார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியத்துக் காகப் போராடிய பலர் இணைந்து செயற்படும்போது மற்றவர்கள் இணைந்து செயற்படுவதில் எந்தத் தடையும் இருக்கமுடியாது.


விடுதலைப்புலிகள் வன்முறை யாளர்கள், இனச்சுத்திகரிப்பாளர்கள், அவர்களின் கடத்தல்களும் விசாரிக்கப் படவேண்டும், இனப்படுகொலை என்று சொல்லமுடியாது என்று சத்தியம் செய்த சுமந்திரனை அன்ரன் பாலசிங்கத்துக்கு நிகரானவரான ஏற்க முடியுமென்றால் சந்திரகுமாரையோ அல்லது வேறு எவரையோ ஏற்பதில் அதிக சிரமமிருக்காது. ஒவ்வொருவரும் தமது தேவைகளுக்காக சமரசம் காணமுடியுமென்றால் மக்களின் நலனுக்காக ஏன் சமரசம் காண முடியாது? தவறுகள் வெளியே தெரியாதவரை எல்லோரும் யோக்கியர்களே. இங்கு யாரும் புனிதமானவர்கள் கிடையாது. ஒவ்வொருவரின் துரோகத்தின் அளவும் பண்பும் வேறுபடலாம். மாறி வரும் அரசியல் சூழ்நிலையைப் தமிழ் அரசியல்வாதிகள் புரிய மறுத்தால் எதிர்காலத்தில் அவர்கள் எல்லோருமே மக்களின் பார்வையில் இனத்து ரோகிகள்தான். தமிழ் மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமெனில் கடந்தகால அனுபவங்களிலிருந்து புதிய சிந்தனைகள் உருவாகவேண்டும். அச்சிந்தனைகள் வழமைபோன்று வெறுமனே தேர்தல் நோக்கிலான வையாக அமையக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எரிசக்தி அரசியலில் இஸ்ரேலின் புதிய வியூகம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

## ஹோர்முஸ்க்கு புதிலாக நெதன்யாகு புது திட்டம்:





உலகளாவிய கச்சாய் எண்ணெய் விலை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது. ஒரு பீப்பா 120 டொலரை தாண்டும் நிலையில் உள்ளது. உலகளாவிய எரிசக்தி நெருக்கடி குறித்து எச்சரிக்கை தொடர்ந்த வண்ணம் இருக்கிறது.

மத்திய கிழக்கு எரிசக்தி அரசியலில் இஸ்ரேலின் புதிய வியூகம் தற்போது தெரிய வந்துள்ளது. ஹோர்முஸ் நீரிணைக்கு முடிவு கட்ட நெதன்யாகு போடும் முக்கிய திட்டம் மூலம், வளைகுடா எண்ணெய் அரசியலை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கின் வரைபடத்தையே மாற்றி அமைக்கும் வல்லமை கொண்டதாக அமையும்.

கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து சவுதி அரேபியா, ஈராக், ஜோர்டான் மற்றும் இஸ்ரேல் வழியாக மத்திய தரைக்கடலுக்கு எண்ணெயை அனுப்பும் வளைகுடா எண்ணெய் மாற்றுப்பாதைக் குழாய்த் திட்டத்தை நெதன்யாகு அரசு அறிவித்துள்ளது.

இதன் மிகப்பெரிய முக்கியம்துவம் என்னவென்றால் ஹோர்முஸ் நீரிணை, சூயஸ் கால்வாய் மற்றும் பாப் எல் -மண்டேப் வழித்தடம் ஆகியவற்றைத் தவிர்த்து, உலகளாவிய எரிசக்தி வழித்தடங்களை தன்வசப்படுத்த இஸ்ரேல் பெரும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. இது மூலோபாய ரீதியாக சக்தி வாய்ந்ததாக இருக்கும்.

குறிப்பாக இப்பகுதி முழுவதும் உள்ள கப்பல் போக்குவரத்துப் பாதைகள் முன்னெப்போதையும் விட அதிக பாதிப்புக்குள்ளாகும் இக்காலகட்டத்தில் இஸ்ரேலின் இந்த முயற்சி அரபு நாடுகளில் முக்கிய விடயமாக மாறியுள்ளது. பிராந்திய போர், கடல் முற்றுகைகள் அல்லது பிராந்திய பதற்றம் ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடிய குறுகிய கடல்வழிப் பாதைகளைச் சார்ந்திருக்காமல், வளைகுடா உற்பத்தியாளர்களுக்கு இது ஒரு நேரடி மேற்கு நோக்கிய வழியை வழங்கக்கூடும் என இஸ்ரேல் கருதுகிறது.




ஆனால், இதன் புவியியல் அம்சங்களைப் போலவே அரசியலும் மிகப் பெரியது. இது போன்ற ஒரு வழித்தடம், ஒன்றுக்கொன்று முரண்படும் நலன்கள், பாதுகாப்பு அபாயங்கள் மற்றும் தீர்க்கப்படாத பிராந்திய பதட்டங்களைக் கொண்ட பல நாடுகளைக் கடக்க வேண்டியிருக்கும். மேலும், இஸ்ரேல் அரசியல் ரீதியாக மிகவும் சிக்கலானதாக மாறினால், அதற்குப் பதிலாக ஜோர்டான் மற்றும் சிரியா வழியாக ஒரு மேற்கு நோக்கிய பாதையே பொருத்தம் என்றும் கூறப்படுகிறது.

எனவே, இந்த இஸ்ரேல் யோசனை வரைபடத்தில் சக்திவாய்ந்ததாகத் தோன்றினாலும், அதை நிஜமாக்குவது மிகவும் சிக்கலானதாக இருக்கும். இந்த வழித்தடம் புவியியல் ரீதியாகப் பொருத்தமானதா என்பதல்ல கேள்வி; அரசியல் அதை எப்போதாவது அனுமதிக்குமா என்பது தான் முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

### வளைகுடா எரிசக்திப் போர்:

வளைகுடாவில் முழுமையான எரிசக்திப் போராக மாறிய ஈரான் நெருக்கடி தற்போது சிறிது தளர்ந்துள்ளது. ஈரானின் 'சவுத் பார்ஸ்' இயற்கை எரிவாயு வயல் மீதான இஸ்ரேலின் தாக்குதலைத் தொடர்ந்து, மத்திய கிழக்குப் போரானது உத்தியோகபூர்வமாக ஒரு எரிசக்தி உட்கட்டமைப்புப் போராக உருவெடுத்தது. இராணுவ இலக்குகளைத் தாண்டி, பொருளாதார முதுகெலும்புகளைக் குறிவைக்கும் புதிய வியூகத்தை இஸ்ரேல் கையில் எடுத்துள்ளது.

உலகின் சுமார் இருபது சதவீத எண்ணெய் மற்றும் எரிவாயு ஹோர்முஸ் நீரிணை பாதை வழியாகச் செல்லும் நிலையில், அதன் முடக்கம் உலக பொருளாதாரத்திற்கு நேரடி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்டுள்ள அதிரடி யான "எரிசக்திப் பாதை" திட்டம் சர்வதேச அரசியலில் ஒரு புதிய விவாதத்தை கிளப்பியுள்ளது. ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே போர் உச்சக் கட்டத்தை எட்டியுள்ள சூழலில், ஹோர்முஸ் நீரிணை முடக்கப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வாக இந்தத் திட்டத்தை நெதன்யாகு முன்மொழிந்துள்ளார்.

**ஹோர்முஸ் நீரிணைக்கு முடிவு கட்ட நெதன்யாகு போடும் முக்கிய திட்டம் மூலம், வளைகுடா எண்ணெய் அரசியலை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கின் வரைபடத்தையே மாற்றி அமைக்கும் வல்லமை கொண்டதாக அமையும். மத்திய கிழக்கு எரிசக்தி அரசியலில் இஸ்ரேலின் புதிய வியூகம் தற்போது தெரிய வந்துள்ளது.**

ஈரானின் எரிவாயு உற்பத்தியில் பாரிய முடக்கம் ஏற்பட்டுள்ள






நிலையில், கட்டாரின் 'ராஸ் லஃபான்' உள்ளிட்ட பாரசீக வளைகுடா நாடுகளின் எரிசக்தித் தளங்கள் மீது ஈரான் தனது பதிலடித் தாக்குதல்களை விரிவுபடுத்தியது. இது சர்வதேச எரிசக்திச் சந்தையில் பாரிய அழுத்தத்தைப் பிரயோகிக்கும் ஈரா னின் திட்டமிட்ட வியூ கமாகக் கருதப்படுகிறது. தற்போதைய கள நிலவரத்தின்படி, ஈரான் இனி மேலும் "விகிதா சார" பதிலடிகளை வழங்காமல், எதிரிகளின் தாக்குதல் எல் லையைத் தாண்டிய பாரிய தாக்குதல்களை முன்னெடுக்கும் புதிய வியூகத்திற்கு மாறியுள்ளது.

இஸ்ரேலின் இந்த திட்டம் ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ள ஹோர்முஸ் நீரிணை யைச் சார்ந்திருப்பதை நிரந்தரமாகத் தவிர்க்க வேண்டும் என்பதே இதன் முதல் இலக்கு. சவுதி அரேபியா போன்ற வளைகுடா நாடுகளின் எண்ணெய் மற்றும் எரிவாயுவை, அரேபிய தீபகற்பத்தின் வழியாக தரைவழியாகக் கொண்டு வந்து, இஸ்ரேலின் மத்திய தரைக்கடல் துறைமுகங்கள் வழியாக உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது. இந்தக் குழாய்கள் அமைக்கப்பட்டால், உலக நாடுகளை அச்சுறுத்தும் கடல் வழித்தடத் தடைகளை என்றென்றும் ஒழித்துவிட லாம் என்று நெதன்யாகு சமீபத்திய உரையில் குறிப்பிட்டுள்ளார்.

### ஹோர்முஸ் முட்டுக்கட்டை தொடருமா?

ஈரான் அமெரிக்கா மோதலின் மிக தீவிரமான மற்றும் உடனடி தாக்கம் உலகளாவிய எரிசக்தி துறையில் வெளிப்பட்டுள்ளது. உலகின் மிக முக்கியமான கடல் வர்த்தக நரம்பு எனக் கருதப்படும் ஹோர்முஸ் நீரிணை, செயல்பட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, உலகளாவிய பணவீக்கம் கட்டுக்கடங்காத அளவிற்கு உயர்ந்து, ஐரோப்பாவில் எரிபொருள் விலை செலவுகள் அதிகரித்துள்ளன. ஆசிய நாடுகளில் உற்பத்தி துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் வளர்ந்து வரும் நாடுகள் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றன.

நெதன்யாகுவின் இந்தத் திட்டம் நிறைவேறினால், இஸ்ரேல் ஒரு வெறும் நாடாக மட்டும் இருக்காது. உலக எரிசக்தி விநியோகத்தின் ஒரு மிகமுக்கியமான "மையமாக" மாறும். தற்போது உலக எண்ணெய் விநியோகத்தில் ஐந்தில் ஒரு பங்கு ஹோர்முஸ் நீரிணை வழியாகவே செல்கிறது. ஈரான் இந்தப் பாதையை அடிக்கடி முடக்குவதால் ஏற்படும் விலை ஏற்றத்தை இத்திட்டம் தடுக்கும் என இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த திட்டத்தின் மூலம் இஸ்ரேல் மற்றும் சவுதி அரேபியா இடையிலான உறவை மேலும் பலப்படுத்தும் ஒரு பொருளாதாரப் பாலமாக அமையும். சவுதி அரேபியா ஏற்கனவே தனது சொந்த கிழக்கு-மேற்கு குழாய் பாதையை மீண்டும் செயல்படுத்தி வருகிறது. இருப்பினும், இஸ்ரேல் வழியாக ஒரு புதிய பாதையை அமைப்பது என்பது மிகப்பெரிய ராஜதந்திர முடிவாகும்.

ஆனாலும் இவ்வளவு நீண்ட தூரக் குழாய் பாதைகளை ஈரானிய ஆதரவு குழுக்களின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பது ஒரு பெரிய சவாலாக இருக்கும். சவுதி அரேபியா தற்போது எவ்விதமான நேரடி அரசியல் அறிக்கைகளையும் வெளியிடாமல், தனது பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதிலேயே முழு கவனத்தையும் செலுத்தி வருகிறது.

சவுதி அரேபியா தற்போது தனது சொந்த 'யான்பு' வழித்தடத்தையே தனது பிரதான பாதுகாப்புக் கவசமாகக் கருதுகிறது. நெதன்யாகுவின் திட்டத்தைச் சவுதி அரசு கவனமாகப் பரிசீலித்தாலும், போருக்குப் பிந்தைய நிலையான அரசியல் சூழல் ஏற்பட்டால் மட்டுமே இது குறித்து அதிகாரப்பூர்வமான 'ஆம்' என்ற பதில் கிடைக்க வாய்ப்புள்ளது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய ஈரான் மீதான இராணுவ நடவடிக்கையின் பின்னணி வெறும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைத் தாண்டி, ஒரு விரிவான புவிசார் அரசியல் வியூகத்தின் பகுதியாகவே பார்க்கப்படுகிறது. டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம், இந்த தாக்குதலின் மூலம் சீனாவின் எரிசக்தி ஆதாரங்களை கட்டுப்படுத்தவும், மத்திய கிழக்கில் புதிய அரசியல் ஒழுங்கை உருவாக்கவும், மேலும் இஸ்ரேலின் பிராந்திய ஆதிக்கத்தை உறுதி செய்யவும் முயன்றதாக மதிப்பிடப்படுகிறது.




ஆனால், இந்த வியூக இலக்குகள் பல முக்கிய தவறான கணிப்புகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. குறிப்பாக, ஈரானின் புவியியல் அமைப்பு மலைப்பகுதிகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு கட்டமைப்புகள் ஒரு நேரடி தரைபடையெடுப்பை மிகவும் கடினமாக்குகின்றன. மேலும், ஈரான் தனது உள்நாட்டு இராணுவ திறன்களைப் பயன்படுத்தி நீண்டகால மோதலை தாங்கக்கூடிய நிலையிலும் உள்ளது.

### உலகப் பொருளாதார நெருக்கடி:

ஹோர்முஸ் நீரிணையை தற்போது அமெரிக்க மூட முடிவு செய்துள்ளதால் உலகப் பொருளாதாரத்திற்கு பாரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. இதனை உடனடியாகத் திறக்காவிடில் நீண்டகால உலகளாவிய நெருக்கடி உருவாகும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அதேவேளை ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறக்கத் தவறினால், ஐரோப்பா மிக மோசமான எரிசக்தி விநியோக நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அத்தோடு, நிலவும் சூழலைக் கருத்திற்கொண்டு, தமது எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய அணுசக்தி தொழில்நுட்பத்தில் மீண்டும் முதலீடு செய்வது குறித்து சர்வதேச நாடுகள் கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பிரச்சினைக்கு உள்ள ஒரே நடைமுறைச் சாத்தியமான தீர்வு, ஈரானின் அனுமதியுடன் இந்த நீரிணையை மீண்டும் திறப்பது மட்டுமே சாத்தியம் ஆகும்.

அத்தோடு, செங்கடலில் ஹூவுதி கிளர்ச்சியாளர்களின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வர்த்தகக் கப்பல்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வது எவ்வளவு கடினம் என்பது ஏற்கனவே நிரூபணமாகியுள்ளது. செங்கடல் பகுதியிலும் ஆளில்லா விமானங்கள், ஏவுகணைகள் மற்றும் வேகமான தாக்குதல் படகுகள் மூலம் எழும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பெருமளவிலான கப்பல்களைப் பாதுகாப்பது சாத்தியமற்றது என தெரிவிக்கப்படுகிறது.

ஹோர்முஸ் நீரிணை இன்று திறக்கப்பட்டாலும் கூட, ஏற்கனவே அங்கு உருவாகியுள்ள பாரிய கப்பல் போக்குவரத்து நெரிசல் காரணமாக, விநியோகச் சங்கிலி இயல்பு நிலைக்குத் திரும்ப நீண்ட காலம் எடுக்கும் என்றும் எச்சரிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பலகட்சி ஜனநாயக முறையைக்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேரூன்றிய பல கட்சி ஜனநாயக முறைமையைக் கொண் டிருப்பதால் ஒரு கட்சி ஆட்சியை நிறுவுவது என்பது சட் டரீதியாகவும் நடைமுறையிலும் சவால்மிக்கதாக இருக் கும் என்றும் குறிப்பாக, தென்னிலங்கையின் அரசியல் கலாசாரம் தீவிரமான கட்சி அரசியல் போட்டியைக் கொண்டதாக இருந்து வருவதால் ஒரு கட்சி மேலாதிக் கத்தை அது அனுமதிக்கக்கூடிய சாத்தியத்தை எதிர்பார்க்க முடியாது என்றும் முன்னைய கட்டுரையில் குறிப்பிடப் பட்டிருந்தது.

சுதந்திர இலங்கையில் தெற்கில் இரு ஆயுதக் கிளர்ச்சி களுக்கும் இனமுரண்நிலையின் விளைவான மூன்று தசாப் தகால உள்நாட்டுப் போருக்கும் மத்தியிலும் கிரமமாக தேர்தல்களை நடத்தியதையும் ஆட்சியதிகார மாற்றம் அமைதியான முறையில் - அரசியலமைப்பின் பிரகாரமே இடம்பெற்று வந்திருக்கிறது என்றும் சுட்டிக்காட்டப் பட்டது.

ஆனால், ஒரு கட்சி ஆட்சியை அல்லது ஆதிக்கக் கட்சி அரசை நிறுவுவதற்கு பாராளுமன்ற ஜனநாயகம் பயன்படுத்தப்பட்ட உதாரணங்களும் இருக்கின்றன என் பதை நாம் மறந்துவிடக்கூடாது. பாராளுமன்ற முறைமை கள் பல கட்சிப் பிரதிநிதித்துவத்தின் மீது கட்டியெழுப் பப்பட்டதாக இருக்கின்ற அதேவேளை, குறிப்பாக ஆளும் கட்சி பாராளுமன்றத்தை அதன் கட்டுப்பாட்டில் வைத் திருக்கும்போது கட்சிகளுக்கு இடையிலான போட்டி களை ஒழிப்பதற்கு அந்த முறைமைகளை சூழ்ச்சித்தனமா கக் கையாளமுடியும்.

காலனித்துவத்துக்கு பின்னரான காலகட்டத்தில் (1960 களில் தொடங்கி 1980 கள் வரை) பல ஆபிரிக்க நாடுகளில் குறிப்பாக ஜூலியஸ் நியரேரேயின் கீழ் தான் சானியாவிலும் குவாமே என்குருமாவின் கீழ் கானாவிலும் காலனித்துவ வல்லாதிக்க நாடுகளிடமிருந்து பெற்றுக் கொண்ட பாராளுமன்ற முறைமைகளைப் பயன்படுத்தி ஒரு கட்சி தனிக்கட்சி அரசுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

தேசிய ஐக்கியம், செயற்திறன் மற்றும் அபிவிருத்திக்கு தனிக்கட்சி முறை அவசியமானது என்று அவர்கள் வாதிட்ட போதிலும், இறுதியில் அது தனியொரு இயக் கம் அதிகாரத்தை மத்தியமயப்படுத்துவதிலேயே போய் முடிந்தது.

நவீன உதாரணமாக, கிழக்கு ஐரோப்பிய நாடான ஹங்கேரியில் 2010 ஆண்டில் இருந்து பிரதமர் பதவி யில் இருந்து வந்த கிறிஸ்தவத் தேசியவாத - தீவிர வலது சாரி ஃபிடெஸ் கட்சியின் தலைவரான விக்டர் ஒர்பன், தனிக்கட்சி ஆட்சியை நடத்தாவிட்டாலும் அரசியலமைப் பையும் தேர்தல் சட்டங்களையும் மாற்றுவதற்கு பாராளு மன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சி களை படுமோசமாகப் பலவீனப்படுத்தி ஆதிக்கக்கட்சி ஆட்சியை நிறுவினார்.

ஆனால், இரு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற தேர்தலில் அவர் படுமோசமான தோல்வியைச் சந்தித்தார். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் ஹங்கேரி யில் மிகவும் நீண்டகாலமாக பதவியில் இருந்துவந்த ஓர் பனே அதிகாரத்தில் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று விரும்பினார். தேர்தல் நாட்களில் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் ஹங்கேரிக்கு விஜயம் செய்தார். ஓர்பனின் தோல்வியை ஐரோப்பாவில் செல் வாக்குப் பெற்றுவரும் தீவிர வலதுசாரிக் கட்சிகள் தங்க ளுக்கு ஏற்பட்ட ஒரு பின்னடைவாக நோக்குகின்றன.

பாராளுமன்றத்தில் வலுவான பெரும்பான்மைப் பலத் தைக்கொண்ட அரசாங்கங்கள் எதிர்க்கட்சிகளைப் பல வீனப்படுத்துவதில் எப்போதும் குறியாக இருந்து வந்தி ருக்கின்றன. இலங்கையில் குறிப்பாக, இலங்கையில் நிறை வேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத் தப்பட்ட பிறகு அந்தப் போக்கு மேலும் தீவிரமடைந் ததை அனுபவ வாயிலாக நாம் கண்டிருக்கிறோம்.

ஆளும் கட்சிகள் பொதுவில் எதிர்க் கட்சிகளின் தேர் தல் வாய்ப்புக்களை பலவீனப்படுத்தக்கூடிய தந்திரோபா யங்களையே கடைப்பிடிக்கின்றன. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்தன ஒரு தடவை தேர்தல் இடாப்பைச் சுருட்டி வைப்பது குறித்துக் கூடப் பேசினார். ராஜபக் சாக்களின் ஆட்சியில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு விலைபேசுவது ஒரு அரசியல் கலாசாரமாகவே இருந்தது.

முன்னைய எந்தவொரு அரசாங்கத்துக்கும் கிடைத்தி ராத பாராளுமன்றப் பெரும்பான்மை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இருக்கிறது. 2024 பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களின்போது ஜே.வி.பி. தலைவர்கள் தங்களுக்கு சுமுகமாக அரசாங்கத்தை நடத்தக் கூடிய பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்தால் போதுமானது என்று வெளிப்படையாகக் கூறியபோதிலும், மூன்றில் இரண்டுக்கும் அதிகமான ஆசனங்களை தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வழங்கினார்கள்.

அத்தகைய பிரமாண்டமான பெரும்பான்மைப் பலத்தை அரசாங்கம் கொண்டிருக்கின்ற அதேவேளை, எதிர்க்கட்சிகள் முன்னென்றுமில்லாத அளவுக்கு பலவீ னப்பட்டிருப்பது ஒரு கட்சி ஆட்சியில் அரசாங்கம் நாட்டம் காட்டக்கூடும் என்ற பீதிக்கு முக்கியமான ஒரு காரணம். ஆனால், அத்தகைய எந்த முயற்சியிலும் அரசாங் கம் இறங்கக் கூடிய சாத்தியம் இல்லை. என்றாலும், அவ் வாறான முயற்சி எதுவும் முன்னெடுக்கப்படுமானால் இலங்கைக்கு பல 'அறகலய" க்கள் தேவைப்படலாம். ●

# நவீன கல்வியும், பாரம்பரிய அறிவும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரம்பரிய அறிவாகும். ஒன்று, செயலை கற்றுத்தருகி றது. மற்றொன்று, அதன் மதிப்பை உணர்த்துகிறது. இந்த இரண்டையும் ஒருங்கிணைப்பதே சரியான பாதையாகும்.

இந்த மாற்றம் கல்வி அமைப்பிலிருந்து தொடங்க வேண்டும். தற்போதைய பாடத்திட்டங்களில் உள்ளூர் மற்றும் பாரம்பரிய அறிவைச் சேர்க்க வேண்டியது அவ சியமாகிறது. அனைத்து மாற்றங்களிலும் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானது. அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

நவீன கல்வி, பாரம்பரிய அறிவின் இணைப்பு என் பது கோட்பாட்டில் மட்டுமே இல்லாமல், உலகின் பல நாடுகளில் நடைமுறையில் வெற்றிகரமாகச் செயல்படுத் தப்பட்டு வருகிறது. ஜப்பான் பள்ளிகளில் மாணவர்கள் தாங்களே வகுப்பறைகளை சுத்தம் செய்வது, ஒழுக்கம் மற்றும் பொறுப்பு உணர்வை வளர்க்கும் ஒரு முக்கிய அம்சமாகும். இது வெறும் ஒரு செயல் அல்ல. அது சமூ கப் பொறுப்புணர்வை கற்றுத் தரும் ஒரு வாழ்க்கைப் பாடமாகும்.

இந்தியாவைப் பார்க்கும்போது, பாரம்பரிய அறிவின் பெரிய களஞ்சியம் இருப்பது தெளிவாகிறது. இந்தியா வில் தேசிய கல்விக் கொள்கை உள்ளூர் அறிவுக்கும் அனுபவ அடிப்படையிலான கற்றலுக்கும் முக்கியத்து வம் அளிக்கிறது. இது நவீன கல்வியையும் பாரம்பரிய அறிவையும் இணைக்கும் முயற்சியாகும்.

நியூஸிலாந்தில், மவோரி மக்களின் பாரம்பரிய அறிவு கல்வியில் இணைக்கப்பட்டுள்ளது. மவோரி மொழி, கலாசாரம், வாழ்க்கை முறைகள் ஆகியவை பாடத்திட் டங்களில் இடம்பெறுகின்றன. இது மாணவர்களுக்கு அவர்களின் அடையாளத்தைப் பாதுகாக்கும் உணர்வை அளிக்கிறது.

பின்லாந்தில் தேர்வு அழுத்தம் குறைவாகவும், அனுப வக் கற்றல் அதிகமாகவும் உள்ளது. மாணவர்களின் மன நலமும் நலனும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. இது பாரம்பரிய மனிதநேய மதிப்புகளையும் நவீன கல்வி முறை யையும் இணைக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சுவிட்சர்லாந்து, உலகின் முன்னேற்றமான கல்வி அமைப்பைக் கொண்ட நாடாகும். அதன் சிறப்பம்சம், கோட்பாட்டு அறிவையும் நடைமுறைத் திறன்களையும் இணைக்கும் திறனாகும். அங்கு இரட்டைக் கல்வி முறை மிகவும் பிரபலம். இதில் மாணவர்கள் வகுப்பறையில் கற்றுக் கொள்வதுடன், தொழில்நுட்பப் பயிற்சியையும் நேரடியாகப் பெறுகின்றனர். அதே நேரத்தில், பாரம் பரிய மதிப்புகளையும் பாது காக்கும் விதமாக, கைவி னைத் திறன்கள், உள்ளூர் தொழில்கள், சமூக ஒற்றுமை ஆகியவை கல்வியில் மறை முகமாக இணைக்கப்பட்டு ள்ளன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கைக்கு மரியாதை போன்ற அம்சங்களும் முக்கிய இடம்பெறுகின்றன.

இவற்றைப் பார்க்கும் போது, எந்த நாடும் தனது பாரம் பரியத்தை முழுமையாகக் கைவிட்டு முன்னேறவில்லை. மாறாக, அவர்கள் தங்கள் வேர்களைப் பிடித்தபடியே புதிய உயரங்களை அடைந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

நவீன கல்வி மற்றும் பாரம்பரிய அறிவை இணைக் கும் முயற்சி கோட்பாட்டில் எளிதாகத் தோன்றினாலும், அதை நடைமுறையில் செயல்படுத்துவது பல சவால் களை உள்ளடக்கிய ஒரு சிக்கலான செயல்முறையாகும்.

முதன்மையாக, நவீன கல்வி மட்டுமே முன்னேற் றத்தை அளிக்கும் என்ற நம்பிக்கை. "பழையது பயனற் றது" என்ற எண்ணம் பலரிடமும் ஆழமாகப் பதிந்துள் ளது. இதைச் சமாளிக்க சமூக விழிப்புணர்வு அதிகரிக் கப்பட வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர் கள் ஆகிய அனைவரும் இந்த இணைப்பின் முக்கியத்து வத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

முழுக் கல்வி முறையையும் மாற்ற முயற்சிப்பதற்குப் பதிலாக, சிறிய முயற்சிகள் மூலம் தொடங்கலாம். இதில் அரசின் பங்கு முக்கியமானது. கல்விக் கொள்கைகளில் மாற்றங்கள் கொண்டுவருதல், நிதி உதவி வழங்குதல், ஆசிரியர் பயிற்சித் திட்டங்களை உருவாக்குதல் ஆகி யவை இந்த இணைப்பை வலுப்படுத்தும்.

நவீன கல்வியும் பாரம்பரிய அறிவும் குறித்த விரிவான ஆய்வின் முடிவில், மனித முன்னேற்றம் ஒரே திசையில் செல்லும் ஒரு பாதை அல்ல அது பல திசைகளை இணைக் கும் ஒரு பரந்த பயணம். அந்தப் பயணத்தில், நவீன கல் வியும் பாரம்பரிய அறிவும் இரண்டு எதிர்மறை சக்திகள் அல்ல. மாறாக, ஒன்றை ஒன்று நிறைவு செய்யும் இரு அத்தியாவசியக் கூறுகளாகின்றன.

தொழில்நுட்ப வளர்ச்சி மனிதனுக்கு வசதிகளை அளித்தாலும், அது மன அமைதியை உறுதி செய்ய வில்லை. உலகமயமாதல் வாய்ப்புகளை வழங்கினாலும், அது அடையாளக் குழப்பத்தையும் உருவாக்கியுள்ளது. இந்தச் சூழலில், நவீன கல்வியும் பாரம்பரிய அறிவும் இணையும் ஒரு சமநிலை அணுகுமுறை மட்டுமே நிலை யான தீர்வை வழங்க முடியும். இந்த மாற்றம் ஒரு சமூக மாற்றமாக இருக்க வேண்டும். அது எதிர்காலக் கல்வி யின் அடித்தளமாக அமையும். (தினமணி)

# பல்லிலாத பாம்பும்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவது பற்றி யோசிக்கும் போது கொடுப்பதற்கான பலத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது பற்றியே சிந்திக்க வேண்டும். அது முடியாது என்பதை உணர்ந்தால் இப்போது இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொள்ளுவது பற்றி மட்டுமே சிந்திக்க வேண்டும். அதற்காக ஒன்றிக்காக முயற்சிக் கூடாதா என்று கேட்டால் - முயற்சிப் பதில் எவ்வித தவறும் இல்லை - ஆனால் அந்த முயற்சி பற்றி சிந்திக்கும் போது, நமது நிலை என்ன என்பதை அறிந்து கொள்ளாமல் அவ்வாறான முயற்சிகளை மேற்கொள்வது பற்றிச் சிந்திப்பதுதான் தவறானது.

தமிழர் தரப்புக்கள் தென்னிலங்கையோடு மேற்கொண்ட அனைத்து பேச்சுவார்த்தைகளுமே தோல்வியில்தான் முடிந்திருக்கின்றது. இதற்கான காரணங்களை ஆராயாமல் தொடர்ந்தும் கோரிக்கைகளை முன்வைக்கப் போகின்றோம் என்னும் அடிப்படையில் விவாதங்களை மேற்கொள்வதில் என்ன பயன் இருக்க முடியும்? ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் இரண்டு சந்தர்ப்பங்களில்தான் தென்னிலங்கை கீழிறங்கிவந்திருக்கின்றது. ஒன்று, இந்திய-இலங்கை ஒப்பந்த காலம், அடுத்தது, நோர்வேயின் தலையீட்டுக் காலம். முதலாவது காலத்தில் தமிழர்களின் பலமாக தமிழ் இயங்கங் களும், தமிழ் மக்கள் மீது பரிவு கொண்ட இந்தியாவும் இருந்தது. இரண்டாவது காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் இருந்தது.

அரசியல்ரீதியான வெற்றிக் கண்ணோட்டத்தில் பார்த்தால், இதில் இந்திய-இலங்கை ஒப்பந்த காலம் மட்டும்தான் ஒரு அரசியல் அடைவை சாத்தியப்படுத்திய காலமாக இருக்கின்றது. இதற்கு இந்தியாவின் பிரத்தியேக தலையீடே பிரதான காரணம். அன்றிருந்த உலக அரசியல் சூழலில் இந்தியாவின் பிராந்திய நலன்களோடு, ஈழத் தமிழர் அரசியல் பொருந்திப் போனமையே அதற்கான காரணமா கும். அதற்கு பின்னர் அவ்வாறானதொரு வாய்ப்பு ஈழத் தமிழருக்கு கிடைக்கவேயில்லை. இனி கிடைக்கும் என்பதற் கான சாத்தியப்பாடுகளில் இந்தக் கட்டுரையாளருக்கு நம்பிக் கையும் இல்லை. ஒரு வேளை அவ்வாறான வாய்ப்பு கிடைத் தாலும் கூட, அதனை கையாளுவதற்கான புத்திபூர்வமான அரசியல் தலைமையும் தமிழ் மக்களிடத்தில் இல்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் நன்மைகளை முழுமை யாக அனுபவிக்க முடியாமல் போனதற்கான காரணங்களும் தமிழர் பக்கத்தில்தான் இருக்கின்றது. ஆரம்பத்தில் அனைத் தும் தமிழருக்கு சாதகமாகவே இருந்தது எனினும் தவறான அரசியல் புரிதல்களால் தேவையற்ற நெருக்கடிகள் உருவா கியது. பின்னர் நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாதளவிற்கு சிக்கலடைந்தது. அதன் பின்னரான காலம் என்பது முற்றிலும் விடுதலைப் புலிகளின் தியாகங்க ளினதும் அர்ப்பணிப்புக்களினதும் காலம்தான். இந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிகள் அவர்களுக்கான அரசியல் அங்கீகாரத்தை வழங்கியது. முற்றிலும் புலிகளுடைய பலத்தின் அடிப்படையிலேயே ஒஸ்லோ பேச்சுவார்த்தை இடம்பெற்றது. பேச்சுவார்த்தை யின் போது, ஆயுதக் களைவு என்னும் பேச்சிற்கே இடமி ல்லை ஏனெனில் அது எங்களுடைய மக்களின் அதிகாரமா கும் என்று பாலசிங்கம் அழுத்தமாக குறிப்பிட்டிருந்தார். ஏனெனில் புலிகளின் ஆயுத பலம்தான் அவர்களுடைய பேரம் பேசும் பலம்.

2009இற்கு பின்னரான காலப்பகுதியில் ஈழத் தமிழரின் அரசியல் பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்பானது. பாம்பு சீறலாம் ஆனால் பாம்பை கண்டு தென்னிலங்கை அஞ்சவேண் டியதில்லை ஏனெனில் பாம்பிற்கு பல்லில்லை என்பது தென் னிலங்கை அறியும் ஏனெனில் அந்தப் பல்லை பிடுங்கியதே அவர்கள்தானே. இவ்வாறானதொரு பின்னணியில்தான் யுத்தத்திற்கு பின்னரான கடந்த பதினாறு ஆண்டுகள் நகர்ந் திருக்கின்றன.

ஒரு அரசியல் உண்மையை நேர்மையாக சொல்வதாயின், ஈழத் தமிழர் தலைமைகள் என்போரால் இப்போது தென்னி லங்கையோடு பேரம் பேசவே முடியாது. வேண்டுமானால், வார்த்தைகளால் மோதிக் கொள்ளலாம் அதாவது பல்லிலாத பாம்பு சீறுவது போன்று. இந்த விடயங்களை ஆழமாக ஆராய்ந்திருப்பதால்தான், இந்தக் கட்டுரையாளர் தொடர்ந் தும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான அரசியல மைப்பின் பதின் மூன்றாவது திருத்தச்சட்டம் தொடர்பிலும், அதனைத் தவிர்த்துச் செல்ல முடியாமையின் அரசியல் யதார்த்தம் பற்றியும் பேசிவந்திருக்கின்றார் - பேசிக் கொண்டி ருக்கின்றார். ஏனெனில் இந்த ஒரு இடத்தில்தான் தமிழர்கள் இந்தியாவை அணுக முடியும். இந்தியா அதன் நலன்களில் நின்று பின்னடித்தாலும் கூட, உரிமையோடு தமிழர்கள் இந்தியாவிடம் மீண்டும், மீண்டும் செல்லலாம் ஏனெனில் இது அவர்களுடைய தலையீட்டின் காரணமாக வந்தது. இந்த பின்புலத்தில் ஈழத் தமிழர் அரசியலில் ஒரு மூன்றாம் தரப்பிற்கான வாய்ப்பிருக்கின்றது என்றால் அது அரசியலமை ப்பின் பதின் மூன்றில் மட்டும்தான் இருக்கின்றது. ஆனால் அந்த வாய்ப்பு புதிய அரசியல் யாப்பில் இல்லை. ஏனெனில் புதிய அரசியல் யாப்பு ஒன்றின் கீழ் தமிழர்களின் கோரிக்கை களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று, எந்தவொரு நிர்பந்த மும் தென்னிலங்கைக்கு இல்லை.

எங்களுடைய அரசியல் வாதம் எவர் மீதான காதலும் அல்ல வெறுப்பும் அல்ல - மாறாக இன்றைய அரசியல் யதார்த்தம். பிஸ்மார்க் கூறியது போன்று, அரசியல் என்பது அடிப்படையில் சாத்தியங்களை கையாளும் ஒரு கலை. அதாவது, எதனை எந்தக் காலத்தில் சாத்தியப்படுத்தா லோமோ, அதனை நோக்கிச் செயற்படுவதுதான் புத்திசாலித் தனமான அரசியல் வேலைத்திட்டமாகும். நமது பாரம்பரிய உரையாடல்களிலும் ஒரு கூற்றுண்டு - காலத்தே பயிர் செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மன்னாரில்...

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

மாவட்ட செயலாளர் தனது வரவேற்புரையில், மன்னார் மாவட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் விநியோகம் ஆகியவற்றுடன் தொடர்புடைய அரச திணைக்களங்களுக்கு இடையில் முறையான ஒருங்கிணைப்பு இல்லாமையே பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. வழங்கப்பட்ட சில அனுமதிப்பத்திரங்கள் தொடர்பிலும் சந்தேகங்கள் நிலவுகின்றன. மணல் அகழ்வு செய்யப்பட்ட இடங்கள் மிக மோசமான சுற்றாடல் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இன்றைய கலந்துரையாடல் அமைய வேண்டும், எனக் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், நான் மாவட்ட செயலாளராகப் பணியாற்றிய காலத்திலிருந்தே மணல் உள்ளிட்ட கனியவளங்களின் அகழ்வு மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு மாவட்ட மட்டத்திலான குழுவொன்று அவசியம் என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளேன். ஆனால், அப்போதிருந்த சில அரசியல்வாதிகளின் பின்புலத்துடன் இயங்கிய சில அரச நிறுவனங்கள் இதற்கு ஒத்துழைக்க மறுத்தன. நான் ஆளுநராகப் பதவியேற்றது முதல் மணல் விநியோகம் தொடர்பான விடயங்களை மிக நுணுக்கமாக அவதானித்து வருகின்றேன்.

ஈவு இரக்கமற்ற விதத்தில் இங்கு மணல் மாபியாக்கள் செயற்பட்டு வருகின்றனர். ஒரு சில குழுக்களே மணலுக்கான விலையைத் தீர்மானிக்கின்றன. இவர்களுக்குச் சில அதிகாரிகளும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குகின்றனர். அரசாங்கக் காணிகளில் அகழப்படும் மணலை மக்களுக்கு நியாயமான விலையில் வழங்கினாலும் பரவாயில்லை ஆனால் இவர்கள் ஒரு டிப்பர் லோட் மணல் விற்பனையில் சுமார் ஒரு இலட்சம் ரூபா வரை இலாபம் உழைக்கின்றனர். குறிப்பிட்ட ஒரே குழுவினரே அகழ்வு மற்றும் விநியோகத்துக்கான அனுமதிப்பத்திரங்களை ஏகபோகமாகப் பெற்றுக்கொள்கின்றனர். அவர்களுக்கு வழங்குவதற்கே சில அதிகாரிகளும் விரும்புகின்றனர். இந்த மோசமான செயற்பாட்டால் அரசாங்கத்துக்குப் நிதியிழப்பு ஏற்படுகின்றது.

மக்களுக்கு நியாயமான விலையில் மணல் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில்தான் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவரை அழைத்து விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தேன். அந்தக் கூட்டத்தின் தீர்மானங்களுக்கு அமைவாகவே இன்று இந்த மாவட்ட மட்டக் கூட்டம் நடத்தப்படுகின்றது. மணல் விநியோகம் மற்றும் மணல் விலை ஆகியவற்றை மாவட்டச் செயலாளர் தலைமையி லான இந்தக் கூட்டத்திலேயே தீர்மானிக்க வேண்டும் என ஆளுநர் செயலகத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அனைத்துத் திணைக்களங்களும் நிபந்தனையின்றி ஒத்துழைக்க வேண்டும், என்று தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, இங்கு நடப்பது சாதாரண மணல் வியாபாரம் அல்ல. ஒரு திட்டமிட்ட மணல் மாபியா. கடந்த ஒன்றரை வருடங்களாக இந்த மணல் மாபியாக்களின் பின்னால் இருப்பவர்கள் யார், அவர்களுக்கு யார் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்கள் என்பதை நான் தீவிரமாக அவதானித்து வருகின்றேன். அவர்கள் இனியாவது இவற்றைக் கைவிட வேண்டும் இல்லையெனில், நாங்கள் அதனை நிரந்தரமாக நிறுத்துவோம். நாங்கள் இந்த விடயத்தைச் சீர்செய்யவே முயற்சிக்கின்றோம். இதற்கு இங்குள்ள அனைத்துத் திணைக்களங்களும் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஒத்துழைக்க மறுத்தால், மாண்புமிகு ஜனாதிபதியுடன் இணைந்து அமைச்சு மட்டத்தில் எடுக்க வேண்டிய மிகக் கடுமையான நடவடிக்கைகளை நாம் எடுப்போம். இங்குள்ள சில அதிகாரிகளுக்கு "டிப்பரால் இடித்துக் கொலை செய்து விடுவார்களோ" என்ற அச்சமும் காணப்படுகின்றது.

மணல் அனுமதி தொடர்பான அதிகாரங்கள் தமக்கு மட்டுமே உள்ளதாகக் கருதி எந்தவொரு திணைக்களமும் தான்தோன்றித்தனமாகச் செயற்பட முடியாது. சகலரும் ஒருங்கிணைந்துதான் செயற்பட வேண்டும். வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களைத் தொகுத்துப் பார்த்தால், அவை ஒரு சிலரின் பெயர்களில்தான் முடங்கியுள்ளன. இங்கு அனுமதி வழங்காவிட்டால் கொழும்பில் சென்று அனுமதியைப் பெற்று வருகின்றார்கள். எதிர்வரும் காலங்களில் மாவட்ட மட்டக் கூட்டத்தில்தான் இவை அனைத்தும் தீர்மானிக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும்-என்றார்.

இதனைத் தொடர்ந்து, கடந்த மார்ச் மாதம் வழங்கப்பட்ட 5 அனுமதிப்பத்திரங்கள் ஊடாக அண்ணளவாக 9,000 கியூப் மணல் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் கடந்த ஏப்ரல் 7ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட கள ஆய்வு தொடர்பான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. இது தொடர்பில் நீண்ட வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றன.

இவற்றின் அடிப்படையில், சட்டவிரோதமாக வழங்கப்பட்ட அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்ட மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களை உடனடியாக இரத்துச் செய்தல், சேதமடைந்த நிலங்களை மீளமைத்தல், ஆற்றங்கரை மற்றும் சுற்றாடலைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற பல காத்திரமான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது பதிலளித்த புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் மாவட்ட பொறியியலாளர், தான் மாவட்டத்தில் பதவியேற்பதற்கு முன்னரே சில கள ஆய்வுகள் நடந்ததாகவும், முன்னைய பொறியியலாளரே அந்த அனுமதிகளை வழங்கியதாகவும் குறிப்பிட்டார்.

இதன்போது குறுக்கிட்ட பிரதி அமைச்சர், இங்குள்ள அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளை நீங்கள் ஒன்றும் தெரியாத சிறு பிள்ளைகள் என நினைக்க வேண்டாம். சுற்றறிக்கைகளுக்குள் ஒளிந்துகொண்டு தப்பிக்க முடியும் எனவும் கனவு காண வேண்டாம். இதயசுத்தியுடன் உண்மையைப் பேசுங்கள் பொறுப்பற்றுக் கதைக்க வேண்டாம், எனக் கடுமையாக எச்சரித்தார்.

தொடர்ந்து ஆளுநர், "இந்த அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்தி இவ்வளவு முறைகேடுகள் நடந்துள்ளன என்பது உறுதியான பின்னர், அவற்றை ஏன் உடனடியாக இரத்துச் செய்யவில்லை?" எனக் கேள்வி எழுப்பினார். அதற்குக் குறித்த பொறியியலாளர், "இந்தக் கூட்டத்தில் முடிவெடுப்பதற்காகவே காத்திருந்தேன்" எனப் பதிலளித்தார்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், "அனுமதி வழங்கும்போது எவ்வித கலந்தாலோசனையுமின்றித் தன்னிச்சையாக வழங்குகின்றீர்கள் இரத்துச் செய்வதற்கு மாத்திரம் ஏன் இந்தக் குழுவின் அனுமதியை எதிர்பார்க்கின்றீர்கள்?" எனத் திருப்பிக் கேட்டார்.

தமது கள ஆய்வின்போது குறித்த மாவட்டப் பொறியியலாளரும் இணைந்திருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டிய மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளர், "அவ்வளவு முறைகேடுகள் நடைபெற்றதை நேரில் கண்ட பின்னரும் அனுமதியை இரத்துச் செய்யாமல் இருப்பதன் பின்னணி என்ன?" என வினவினார். இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்யப்பட்டு முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என ஆளுநர் அறிவித்தார். (அ)

## பெருமுனவின்...

நள்ளிரவு கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளார்.

"டி.ஜே. வத்த" எனும் இடத்தில் குழுவொன்று ரகளையில் ஈடுபட்டதாக தகவல் கிடைத்ததையடுத்து, சம்பத் அத்துக்கோரள அங்கு சென்று நிலைமையை ஆராய முயன்றுள்ளார்.

அப்போது அங்கிருந்த ஒருவர் திடீரென கூர்மையான ஆயுதத்தால் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இந்த தாக்குதலில் காயமடைந்த அவர் உடனடியாக கராப்பிட்டிய தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். பின்னர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பிட்டிகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## ஹோர்முஸ் நீரிணை...

"அமெரிக்காவின் இத்தகைய நடவடிக்கைகளால், ஹோர்முஸ் நீரிணையின் கட்டுப்பாடு மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த நீர்ப்பாதை இப்போது எமது ஆயுதப் படைகளின் கடுமையான நிர்வாகம் மற்றும் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது." என குறித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ)

## மலையக தமிழருக்கு...

இந்தியாவின் "நவோதயா" பாடசாலை திட்டத்தின் அடிப்படையில் ஆங்கில மொழி மூல சர்வதேச இந்து பாடசாலைகளை உருவாக்குதல்.

ஆசிரியர் பயிற்சி, தாதியர் பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி கலாசாலைகளை நிறுவுதல்.

பாடசாலைகளுக்கான பௌதிக வளங்கள் மற்றும் புலமைப்பரிசில் திட்டங்களை அதிகரித்தல்.

புயல் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட மக்களுக்கு நிரந்தர வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும், தற்போது வழங்கப்பட்டு வரும் நிதி உதவிகளை அதிகரிப்பதற்கும் இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

இக்கோரிக்கைகள் ஏற்கனவே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோரிடம் முன்வைக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டிய மனோ கணேசன், அவற்றை மீண்டும் ஒருமுறை துணை ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளதாகக் குறிப்பிட்டார். (அ)

## ஹோர்முஸ் பதற்றம்...

அமெரிக்காவின் துறைமுக முற்றுகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் தனது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளதாக ஈரான் அறிவித்த சில மணிநேரங்களிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

24 மணிநேரத்திற்கும் குறைவான காலப்பகுதியே இந்த நீர்ப்பாதை திறக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மீண்டும் அங்கு போர் பதற்றம் அதிகரித்துள்ளது. (அ)

## வலுசக்தி அமைச்சராக...

அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக பிமல் ரத்நாயக்க துறைமுகங்கள் அமைச்சிலிருந்து இராஜினாமா செய்த பின்னர், கருணாதிலக்க அதே அமைச்சுக்கு நியமிக்கப்பட்டார்.

அவர் களனி பல்கலைக்கழகத்தின் கணிதத் துறையில் நீண்ட காலம் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றினார். இது தவிர, எதிர்வரும் நாள்களில் பல அமைச்சுப் பதவிகளிலும் மாற்றங்கள் இருக்கும் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த அமைச்சுப் பதவிகளுக்குப் பல பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட உள்ளனர். சுனில் வட்டகல, முனீர் முளப்பர் மற்றும் பிரசன்ன குணசேன போன்ற பிரதி அமைச்சர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு ஆராயப்பட்டுள்ளது.

இந்த அமைச்சு மாற்றம் தொடர்பாக அரசாங்கத்திற்குள் தற்போது நீண்ட கலந்துரையாடல் நடைபெற்று வருகிறது என தெரிவிக்கப்பட்டது. (அ)

## எங்கள் விடுதலை...

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த கால அரசுகளைக் காட்டிலும் தற்போதைய அரசு, தமிழர்களின் உரிமைக் குரலை நசுக்க மிக நுணுக்கமான அரசியல் காய்நகர்த்தல்களைச் செய்கின்றது. யுத்தம் மௌனிக்கப்பட்டு ஆண்டுகள் பல கடந்தும், எமது பூர்வீகக் காணி அபகரிப்புகள் ஓயவில்லை. இராணுவமயமாக்கல் ஊடாக எமது நிலங்கள் பறிக்கப்படுவதும், மக்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்படுவதும் இன்றும் தீர்க்கப்படாத வலிகளாகத் தொடர்கின்றன. இதற்குப் பின்னால் இருப்பது மிகத் தெளிவான சிங்கள மேலாதிக்க மனநிலை. தமிழர்களைத் தமக்குச் சமமான குடிமக்களாகக் கருதாது, இழிவான பார்வையுடன் அடக்கி ஒடுக்கும் போக்கையே அவர்கள் இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர்.

இத்தனை ஒடுக்குமுறைகளுக்கும் சவால்களுக்கும் மத்தியில்தான், கடந்த 16 ஆண்டுகளில் நாம் அழிந்துபோன நிலையிலிருந்து மீண்டு, அறத்தின் வழியிலான அரசியலை முன்னெடுத்துள்ளோம். எமது கொள்கை மீதான நேர்மையும், மக்களுக்காகத் துணிந்து நிற்கும் குணமுமே இன்று இந்த மண்ணின் மக்களை எம்மிடம் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. எமது சமூக மேன்மைக்கான இந்த நகர்வுகளைத் தகர்ப்பதற்குப் புலனாய்வுத் துறையினரும், ஒட்டுக்குழுக்களும் எம்மோடு ஒட்டிக்கொண்டு கடும் பிரயத்தனம் செய்வார்கள். ஆனால், எத்தகைய சதித்திட்டங்கள் வந்தாலும் தியாக தீபம் திலீபனைப் போன்றும், தியாகத்தாய் அன்னை பூபதி போன்றும் நாம் கொள்கை உறுதியோடு பயணிக்க வேண்டும்.

அன்னை பூபதி அம்மா அவர்கள் இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தனது உயிரையே ஈகம் செய்து எமக்குக் கற்பித்த உறுதியான கொள்கைத் தெளிவுள்ள விடுதலைக்கான அறைகூவலை, அதே உறுதியுடனும் தேசப்பற்றுடனும் நாம் உலகிற்கு உரக்கச் சொல்வோம். எமது வீரஞ்செறிந்த போராட்ட வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு இட்டுச் செல்லும் வரலாற்றுப் பணியை அன்னை பூபதியின் நினைவில் நின்று தொடர்வோம்-என்றார். (அ)

## பாதுகாப்புப் பிரதி...

உயர்மட்ட அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே வலுசக்தி அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ள குமார ஜயக்கொடி, வரும் நாள்களில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜினாமா செய்ய உள்ளார். அவரது இராஜினாமாவுக்குப் பிறகு, அந்த வெற்றிடத்திற்கு துய்யகொந்தா நியமிக்கப்படுவார் என்று கூறப்படுகிறது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின்போது கிழக்கு இராணுவத்தின் தளபதியாகப் பணியாற்றிய இப்போதைய அருண ஜயசேகர மீது, கர்தினால் மல்கம் ரஞ்சித் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். பாதுகாப்பு பிரதி அமைச்சர் பதவியில் மாற்றங்களை செய்வதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம் என்று தெரியவந்துள்ளது.

இதற்கிடையில், துய்யகொந்தாவின் இராஜினாமாவால் வெற்றிடமாகும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவிக்கு, முன்னாள் இராணுவத் தளபதியான தயா ரத்நாயக்க நியமிக்கப்படுவார் எனத் தெரிகிறது. (அ)

## உயிர்த்த ஞாயிறு...

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் எதிர்பார்ப்பது போல, இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள உண்மைத் தன்மையை இறைவன் வெளிப்படுத்தவேண்டும் என வேண்டி, இந்தப் பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார். (அ)

## முல்லை வைத்திய...

அதிகாரிகள் நேரடியாக வருகை தந்து கையும் மெய்யுமாக கைது செய்துள்ளனர்" என தகவல்கள் தெரிவிக்கின்றன. வைத்தியசாலைக் கணக்காளர் கைதுசெய்யப்பட்டதை உறுதிப்படுத்திய முல்லைத்தீவுப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கைதுக்கான காரணம் இதுவரை தமக்கு உத்தியோகபூர்வமாக கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்தார். கைது செய்யப்பட்ட இருவரும் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# தமிழர்களுக்கு எதிரான திட்டங்களை முறியடிக்க இறுக்கமான கட்டமைப்பு!

## அதற்காகவே தமிழரசுடன் பேச்சு என்கிறார் சுரேஷ்



யாழ்ப்பாணம், ஏப். 19

தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்திட்டங்களை எதிர்ப்பதற்கு இன்னும் இறுக்கமான கட்டமைப்பை உருவாக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமிழரசுக் கட்சியுடன் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழரசுக் கட்சியுடன் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி தொடர்ந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறது.

பொதுவான விடயங்களில் நாங்கள் ஒன்றுபட்டு செயற்படுவது தொடர்பிலும், தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் கொண்டு வருகின்ற திட்டங்களை எதிர்ப்பது மற்றும் தீர்வுத் திட்டம் தொடர்பிலும் பேச்சுக்களை நடத்தியுள்ளோம்.

அத்துடன் மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்பது தொடர்பிலும் பேச்சுக்களை நடத்தி இருக்கிறோம். இன்னும் இறுக்கமான கட்டமைப்பாக நாங்கள் தொடர்ந்து செயற்படுவது தொடர்பில் தமிழரசுக் கட்சி ஆராய்ந்து வருகிறது. அது தொடர்பில் நாங்கள் தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவோம்.

அத்துடன் அரசாங்கம் கொண்டுவரும் பௌத்த மேலாதிக்கத்தை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் -என்றார். (அ)

# எரிசக்தி அமைச்சர் பதவி விலகல் எதிர்க்கட்சிக்கு கிடைத்த வெற்றி!

## சுதந்திரக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 19

நிலக்கரி ஊழல் விவகாரத்தைத் தொடர்ந்து எரிசக்தி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் பதவி விலகியிருப்பது, மக்கள் அழுத்தத்துக்கும் எதிர்க்கட்சியின் அரசியல் போராட்டத்துக்கும் கிடைத்த வெற்றியாகும் என சுதந்திரக் கட்சியின் பொருளாளர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் தலைமைகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், சமூக ஊடகங்கள் மூலம் மக்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்வும் பொதுமக்களின் அழுத்தமும் காரணமாகவே இந்த பதவி விலகல்கள் இடம்பெற்றதாகக் குறிப்பிட்டார்.

முன்னதாக நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது அரசாங்கத்தை பாதுகாத்த உறுப்பினர்கள், எவ்வித தவறும் நடக்கவில்லை எனக் கூறியிருந்தாலும், தற்போது உண்மைகள் மக்கள் முன்னிலையில் அம்பலமாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவின் விசாரணைகள் குறித்து கருத்து தெரிவித்த லசந்த அழகியவன்ன, கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை என்பது பரிந்துரைகளுக்கான ஆவணமே அன்றி குற்றவாளிகளை தீர்மானிக்கும் ஆவணம் அல்ல என விளக்கமளித்தார்.

குறித்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்ட பின்னரே சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (அ)

## உலகின் செல்வாக்கு மிக்க தலைவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு முதலிடம்



வாஷிங்டன், ஏப். 19

உலகின் செல்வாக்குமிக்க தலைவர்களின் பட்டியலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி முதலிடம் பிடித்துள்ளார்.

உலகின் 24 ஜனநாயக நாடுகளில் நடத்தப்பட்ட மக்கள் கருத்து கணிப்புக்களின் அடிப்படையிலேயே இத்தெரிவு இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த மோர்னிங் கன்சல்ட் என்ற ஆய்வு நிறுவனம், பல்வேறு நாட்டுத் தலைவர்களின் செயல்பாடுகள் குறித்து அண்மையில் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியது.

இந்த ஆய்வின் முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன.

24 ஜனநாயக நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் பெருவாரியான மக்களின் ஆதரவைப் பெற்று அதாவது 70 வீத மக்களின் ஆதரவுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க தலைவராகத் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

இவருக்கு அடுத்தபடியாக தென் கொரிய அதிபர் லீ ஜே-மியுங் 63 வீத ஆதரவுடன் இரண்டாம் இடத்தையும், செக் குடியரசு பிரதமர் ஆண்ட்ரே பாபிஷ் 55 வீத ஆதரவுடன் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜேர்மனி பிரதமர் பிரெடரிக் மெர்ஸின் செயல்பாடு திருப்திகரமாக இல்லை என்று அந்த நாட்டு மக்களில் சுமார் 76 வீதம் பேர் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் உலக அளவில் செல்வாக்கு குறைந்த தலைவர்கள் பட்டியலில் அவர் முதலிடத்தில் உள்ளார். (அ)

## சிறையில் ஜோன்ஸ்டனை பார்வையிட்ட நாமல் எம்.பி.

கொழும்பு, ஏப். 19

மஹர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று நேரில் சந்தித்து புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், அவரது உடல்நிலை மற்றும் நலன்கள் குறித்தும் விசாரித்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த நாமல் ராஜபக்ஷ, தற்போதைய அரசாங்கம் மக்களால் வழங்கப்பட்ட ஆணையை சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டு அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபட்டு வருவதாக குற்றஞ்சாட்டினார்.

தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமை, விலையேற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க இயலாமை போன்ற அரசாங்கத்தின் தோல்விகளில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகள் திட்டமிட்டு குறிவைக்கப்படுகின்றனர் என அவர் கூறினார்.

விளக்கமறியலில் உள்ள ஜோன்ஸ்டன் பெர்னான்டோ மன உறுதியுடன் இருப்பதாகவும், இத்தகைய அரசியல் சவால்கள் அவருக்கு புதிதல்ல என்றும் நாமல் குறிப்பிட்டார். (அ)

## 8 இலட்சத்தைக் கடந்துள்ளது சுற்றுலா பயணிகள் வருகை

கொழும்பு, ஏப். 19

இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில், நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 8 இலட்சத்தை கடந்துள்ளது.

கடந்த 4 மாதங்களில், 8 இலட்சத்து 9 ஆயிரத்து 595 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் 15 நாள்களில் மட்டும், 68 ஆயிரத்து 961 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

அந்தவகையில் 19 ஆயிரத்து 822 சுற்றுலாப் பயணிகள், இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

## மசகு எண்ணெய் கப்பல் நேற்று கொழும்பு வந்தது

கொழும்பு, ஏப். 19

மத்திய கிழக்கு மோதல் ஆரம்பமான பின்னர், முதலாவது மசகு எண்ணெய் தாங்கி கப்பல் நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளது.

சுமார் 97 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மசகு எண்ணெய்யை ஏற்றிய கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்தது.

நாட்டின் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்தும் வகையில், மசகு எண்ணெய் கப்பல் வருகை தந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையங்கள் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

## வவுனியாவில் வீடு தீக்கிரை

வவுனியா, ஏப். 19

வவுனியா, தம்பனைபுளியங்குளம் பகுதியில் வீடு ஒன்று முற்றாக எரிந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் வீட்டில் யாரும் இல்லாததால் உயிர் சேதம் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது. அயலவர்களின் உதவியுடன் தீயை கட்டுப்படுத்த முயற்சி செய்தமையினால் மேலதிக அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வீட்டில் மின்சாரக் கோளாறு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (அ)

# இந்தியத் துணை ஜனாதிபதியின் வருகை; கொழும்பில் விசேட போக்குவரத்து ஏற்பாடு

கொழும்பு, ஏப். 19

இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணனின் உத்தியோக பூர்வ விஜயத்தை முன்னிட்டு, இன்று ஞாயிற்றுக்கிழமை மற்றும் நாளை திங்கள்கிழமை ஆகிய இரு தினங்களிலும் கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் விசேட போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியத் துணை ஜனாதிபதி இன்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடையவுள்ளார். அங்கிருந்து அவர் பலத்த பாதுகாப்புடன் கூடிய வாகனப் பேரணியில் காலி முகத்திடலில் அமைந்துள்ள தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்கு வருகை தரவுள்ளார்.

இதன் காரணமாக, அவர் பயணிக்கும் காலப்பகுதியில் அந்தப் பகுதிகளில் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து, அவர் தங்கியிருக்கும் ஹோட்டலில் இருந்து ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்லவுள்ளதால், அதனைச் சூழவுள்ள வீதிகளிலும் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், நாளை திங்கட்கிழமை அவர் பயணிக்கும் வீதிகளை அண்டிய பகுதிகளிலும் விசேட போக்குவரத்துத் திட்டங்கள் அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org